13

R. M. 1803. JUNE 1928 Vol. V—No 11.

10 AUG 1929

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

வருட சந்தா உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 2-8.

அமெரிக்கன் சில்க் — — — — — அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை. உடல் திக்கானபட்டு: தினசரி துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முழ நீளம் 40'' அகலம்.

விலை ரூ. **6—8—0** தான்.

கிடைக்கவில்லையே ! என்றுவருந்தவேண்டாம்.

ஏற்கெனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்குமேல் செலவாகியும் ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள் டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால் இதன் உண்மை நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள் !

முத்தையாவ்ஸ் பாபுலர் ஷர்ட்டுகள்

[illegible] திக்கான உசத்தி டுவில். பால்போன்ற வெள்ளை. கைதேர்ந்த தையற்காரர்களைக் கொண்டு செய்த மனோகரமான கட்டிங். உறுதியான தையல். உறுதிக்கும் நீண்ட உழைப்புக்கும் உத்திரவாதம். காலருடனும். காலரில்லாமலும் கிடைக்கும். கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

நெ. 1	டுவில் ஷர்ட் 1-க்கு விலை	ரூ. 2—0—0.
,, 2	காக்கி ஷர்ட் விலை	ரூ. 2—4—0.
,, 3	இங்கிலீஷ் டுவில் ஷர்ட்	ரூ. 2—4—0.
,, 4	அமெரிக்கன் டோரியா	ரூ. 2—4—0.
,, 5	உசத்தி பாப்ளின் ஷர்ட்	ரூ. 3—8—0.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, **சென்னை.**

ஓம்

லக்ஷ்மி

REGISTRAR OF BOOKS
10 AUG 1929
MADRAS

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி

பிரசுரிக்கப்படும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா

மலர் 5.	விபவஹூ ஆனிமீ 1928 ஜூன்	இதழ் 11.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	... 459
2.	பூச்சிகாட்டல்	... 460
3.	தாவர அறிவு	... 461
4.	உருத்திர சூக்தம்	... 465
5.	மதுசாரம்	... 469
6.	சன்யெட் சன்	... 473
7.	தமிழ்நாட்டு வள்ளல்	... 476
8.	அரிவாட்டாய நாயனர்	... 479
9.	லேயோனிதன்	... 481
10.	ஹிருதயம் துடிப்பதேன் ...	... 487
11.	வண்டிக்கார கந்தன்	... 491

படம்,

(1)	ராவ் சாஹெப் ஆர்: சப்பய்யா நாயுடுகாரு	... 472
(2)	சர். அண்ணமலை செட்டியார் ...	... 477
(3)	ஸ்ரீ. வீராசாமி	... 490

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையி லிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால், மாறுதல் விலாசத்தை 25-ந் தேதிக்குள் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும் லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாகச்சேர்த்துவிடக் கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்,

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி 99. சென்னை.

லக்ஷ்மி துதி

திருமகளே! திருப்பாற் கடலூடன்று
தேவர் தொழ

வருமகளே! உலகெல்லாமும் என்றென்றும்
வாழவைக்கும்

ஒருமகளே! திருமாலுரத்தேயுற்
றறம்பெரிது

தருமகளே! தமியேன் தலைமீதுநின்
தாளை வையே!

அப்பூச்சி காட்டல்.

(1) மெச்சூது சங்கம் இடத்தான் நல்வேயூதி
பொய்ச்சூதில் தோற்ற பொறையுடை மன்னர்க்காய்
பத்தூர் பெறாது அன்று பாரதம் கைசெய்த
அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான்.

(2) மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும்
பலர்குலைய நூற்றுவரும் பட்டழிய, பார்த்தன்
சிலைவளையத் திண் தேர்மேல் முன்னின்ற செங்கண்
அலவளைந்து அப்பூச்சி காட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான்.

(3) காயும்நீர் புக்குக்கடம்பேறி, காளியன்
தீய பணத்தில் சிலம்பார்க்கப் பாய்ந்தாட்டி
வேயின் குழலூதி வித்தகனாய் நின்ற
ஆயன்வந்து அப்பூச்சி காட்டுகின்றான்!
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான்.

(4) சேப்புண்ட சாடு சிதறி திருடி நெய்க்கு
ஆப்புண்டு நந்தன் மனைவி கடைத் தாம்பால்
சோப்பூண்டு துள்ளித்துடிக்கத் துடிக்க அன்று
ஆப்பூண்டான் அப்பூச்சி காட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான்.

(5) செப்பிள மென்முலை தேவகி நங்கைக்கு
சொப்படத்தோன்றித் தொறப்பாடியோம் வைத்த
துப்பமும் பாலும் தயிரும் விழுங்கிய
அப்பன்வந்து அப்பூச்சி காட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான்.

(6) மதக முதலைவாய்ப் பட்டகளிறு
கதறிக்கைகூப்பி என்கண்ணா! கண்ணா! என்ன
உதவப் புள்ளூர்ந்து அங்கு உறுதுயர் தீர்த்த
அதகன்வந்து அப்பூச்சி காட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான்.

(பெரியாழ்வார்)

தாவர அறிவு.

(ஆசிரியர்.)

பிரபஞ்ச விநோதங்களை யாரால் அளவிட முடியும்? விஞ்ஞான ஆராய்ச்சி விருத்தியடைய வடைய எவ்வளவோ புதுப்புது உண்மைகள் புலனாகி வருகின்றன. விஞ்ஞான சாஸ்திர உதவியால் மனிதன் பஞ்ச பூதங்களையும் கீழடக்கி விட்டான். வானிலும், மண்ணிலும் புதைந்து கிடக்கும் அரிய பெரிய இரகசியங்களையும் வெளிப்படுத்தி விட்டான். உயிரற்றவைகளென எண்ணப்பட்டு வந்த தாவரங்களுக்கும் உயிருண்டு என்ற உண்மை ஸ்தாபிதமாகி விட்டது. அம்மட்டோ ? தாவரங்கள் உணரும் ஆற்றலும் உடையனவாம். சுகதுக்கங்களை யறியும் சக்தியும் அவைகளுக்குண்டாம்; வேண்டியவைகளைக் கைப்பற்றவும் வேண்டாதவைகளை அகற்றவும் தாவரங்களுக்குத் தெரியுமாம்; ஆசிரியர் ராயல் டிக்சன் பிராங்க்லின் ஹிச் என்னும் பெயர்பெற்ற தாவர சாஸ்திரி சமீபத்தில் வெளியிட்ட Personality of Plant எனனும் நூலில் தாவரவாழ்க்கையைப் பற்றிய அநேக விஷயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. நமது வங்க ஜோதி சர் ஜகதீச சந்திரபோஸ் தாவர வாழ்வைப்பற்றி வெளியிட்ட அநேக உண்மைகளை நம்மவர்கள் பத்திரிகை வாயிலாய் அறிந்திருக்கக் கூடும். நமது வங்க மேதாவி இப்பொழுதும் மேனாடுகளில் தாவர வாழ்க்கையைப் பற்றி அரிய பிரசங்கங்கள் நடத்தி மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரிகளின் நன்மதிப்பைப் பெற்று வருகிறார். இந்த விஞ்ஞான சூரியர்கள் உதவியால், அஞ்ஞான இருளில் மறைந்து கிடக்கும் அநேக திவ்ய உண்மைகள் வெளியாகி இம்மண்ணுலகம் பிற்காலத்தில் விண்ணுலகமாய் விளங்குதல் கூடுமென எதிர்பார்ப்பது மிகையாகுமா?

தரையில் படரும் சிறு கொடி முதல் காட்டில் வளரும் பெரும் மரம் வரை எல்லாத் தாவரங்களுக்கும் ஆத்மா உண்டென தாவர சாஸ்திரிகள் உறுதி கூறுகின்றனர். சுக துக்கங்களைப் பகுத்தறியும் சக்தியும் தாவரங்களுக்கு உண்டாம்.

புயற்காற்றுண்டாவதை முன்னாடியே அறியும் திவ்ய சக்தியைத் தாவரங்கள் பெற்றிருக்கின்றன. இதற்கு உதாரணமாகப்

பன்னீர் புஷ்பத்தைச் சொல்லலாம். புயற்காற்று எழும்பும்போது பன்னீர் புஷ்பங்கள் தம் இதழ்களை மூடிக்கொள்ளுமாம். இலைகளும் கொம்போடு கொம்பாய்ச் சேர்ந்து கொள்ளுமாம். மாமிசபட்சணிகளான சில தாவரங்களின் சக்தி மிகவும் அதிசயிக்கத் தக்கதா யிருக்கின்றது. சன்ட்யூ என்ற செடி பிராணிகளைத் தின்னும் இயல்புடையது. அச்செடிகளின் இலைகளில் விழும் கல்லையும் மண்ணையும் அவை பொருட் படுத்துவதில்லை. தப்பித்தவறி ஒரு சிறு புழுவோ பூச்சியோ அவ்விலைகளில் தங்கி விட்டால் அச்செடிக்குண்டாகும் வீரா வேசத்தை என்னென்று கூறுவது! கடும் பசியால் வருந்தும் சிறு பையன்கள் கையில் ஏதேனும் தின்பண்டங்கள் அகப்பட்டால் எவ்வளவு ஆவலோடும் ஆத்திரத்தோடும் அதை ஒரே விழுங்காய் விழுங்குவார்களோ அதேபோல் இவ்விலைகளும் தம்மேல் படிந்த புழு பூச்சிகளை ஒரே விழுங்காய் விழுங்கி விடுகின்றன. தமக்கு இரையாகக் கூடிய பிராணிகள் பக்கத்தில் வந்தால், ஐம்புல அறிவினாலோ அல்லது இதுகாறும் வெளிவராத ஏதேனும் ஒரு ஆறாவது புலனறிவினாலோ, அப்பிராணிகளின் வரவை சன் ட்யூ இலைகள் எளிதில் உணர்ந்து விடுகின்றன. ஒரு அட்டையில் சில ஈக்களைக் குண்டூசிகளால் குத்தி வைத்து அச்செடியினருகில் கொண்டு சென்றால், அச்செடியின் கிளைகள் நீண்டு ஈக்களைப்பிடிக்க முயலுவதைத் தாவர சாஸ்திரிகள் கண்டறிந்திருக்கின்றனர். எவ்வளவு நுட்பமான பொருளையும் அறிய சன்ட்யூ செடி சக்தியுடையதாய் இருக்கிறதாம். ஒரு அங்குலத்தின் இருபத்தைந்தி லொரு பகுதி நீளமுள்ள ஒரு உரோமத்தை ஸ்பரிச சக்தியா லறியவும் அச்செடிக்கு ஆற்றலுண்டாம். தொட்டால் வாடி அல்லது தொட்டால் சுருங்கிச் செடியின் அதியற்புத ஸ்பரிச சக்தியை அறியாதார் யார்?

பெயர் பெற்ற Venus Fly Trop என்ற செடியின் அதிவிநோத ஸ்பரிச சக்தி பிராணிகளுக்குக் கூட இல்லையாம். அச்செடியின் இலைகளின் மேற் பாகத்தில் உரோமம் போன்ற அதிநுட்பமான மூன்று சிறு கம்பிகள் இருக்கின்றனவாம். இச்சிறு கம்பிகள் அவ்விலையினுள்ளே அமைந்திருக்கும் சுற்றுக்கம்பியோடு (Spring) இணைக்கப் பட்டிருக்கின்றனவாம். இலைகளண்டை ஏதேனும் ஒரு பிராணி வந்தால் இக்கம்பிகள் மூலம் அச்செய்தி அச்செடிக்கு அறிவுறுத்தப் படுகின்றது. படவே இலைகள் திடீரென்று கூம்பி அப்பிராணிகளைத் தன்னுள் அடக்கிக் கொள்ளுகின்றன. அவ்வாறு கூம்பி இரைகளைப் பிடிக்கும் பொழுது, ஒரு

ஆட்டைப் பாய்ந்து கொல்லும் புலிக்குள்ள வீராவேசம் அச்செடியில் பிரத்தியட்சமாகிறதாம்.

மக்கள் வாழ்க்கை துன்பம் நிறைந்தது. நமது வாழ்நாளில் ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்துக்கிடமான தாகவே இருக்கிறது. அவ் வாபத்தினின்றும் விடுபட நாம் சதா முயன்று கொண்டே இருக்கிறோம். உற்று நோக்கில் நமது உலக வாழ்க்கை, உண்மையில் ஒரு போராட்டமாகும். நமது ஒவ்வொரு முயற்சியும், அந்தரம் பார்க்கில், ஆபத்திலிருந்து தப்பும முயற்சியாகவே இருக்கின்றது. உண்ணும்போது உயிர் துறந்தவர் எத்தனை பேர்! பருகும் போது உயிர் நீத்தவர் எத்தனை பேர்! நடக்கும்போது இறந்தொழிந்தவர் எத்தனை பேர்! அம்மம்ம! நமது வாழ் நாளின் ஆபத்துக்குத்தான் கையும் கணக்கு முண்டா! இவ் வாபத்துக்களிலிருந்து தப்புவதே நமக்கு ஒரு பெரும்பாடாகி விட்டது.

இவ்விஷயத்தில் தாவரங்களும் நம்மைப் போலவே இருக்கின்றன. ஆபத்துக்களிலிருந்து தப்ப செடி கொடிகளும் வன் மரங்களும் சதா முயன்றுகொண்டே இருக்கின்றன. அனேக கொடிகளுக்குக் கொள் கொம்பின்றி வாழ முடியாது. ஆகவே ஒரு கொள் கொம்பைத் தேடி செடிகள் பூமியில் படர்ந்து செல்கின்றன. ஒரு செடியோ மரமோ ஒரு தூணோ அகப்பட்டால் அக்கொடிகள் அவைகளைப் பற்றிப் பிடித்துப் படரத் தொடங்குகின்றன. அப்பால் பூமியில் படர்வதில்லை. பூமியில் ஒரு செடி படர்ந்து சென்று, ஒரு தூணைப்பற்றி அதன்மேல் படர எத்தனிக்கையில், அத்தூணை அந்த இடத்திலிருந்து அப்புறப் படுத்தி வேறொரு இடத்தில் நட்டால் பின்னும் அக்கொடி தூணைத் தேடிப் படருகின்றது. தூணைக்கண்டு பிடிக்கும் வரை படர்ந்து கொண்டே இருக்கும். தூணைக் கண்டு விட்டால், பிறகு பூமியில் படராது. என்னே அக் கொடிகளின் அற்புத ஞானம்!

பகற்பொழுது உழைக்கும் நாம் களைப்புத்தீர இரவில் உறங்குகிறோம். உழைப்பாளிகளுக்கு உறக்கம் எவ்வளவு இன்றியமையாத தென்பதை யாவரும் அறிவர். தாவரங்களுக்கும் உறக்கம் இன்றியமையாத தாகவே இருக்கிறது. சூரிய வெளிச்ச மில்லாதபோது இலைகள் கூம்பு மென்று சிலர் தப்பாக எண்ணுகிறார்கள். இலைகள் கூம்புவது தாவரங்களுக்கு இருட்டின் மேலுள்ள வெறுப்பினாலன்று. உறக்கத்தின் தேவையாலே செடிகளின் இலைகள் கூம்புகின்றன; இன்ன சமயத்தில் உறங்க வேண்டும். இன்ன

சமயத்தில் விழிக்க வேண்டும்; இவ்வளவு நேரம் உறங்க வேண்டும் என்னும் ஞானமும் தாவரங்களுக்குண்டு. ஒரு தாவர சாஸ்திரி ஒரு செடியை ஒரு அறைக்குள் வைத்து அதன் போக்கைக் கவனித்து வந்தார். இரவு மணி 8 ஆனால் இலைகளும் மலர்களும் கூம்பி, அச் செடி துயிலத் தொடங்குமாம். சுமார் இரவு 4-மணிக்கெல்லாம் (சூரிய வெளிச்சம் உண்டாவதற்கு முன்னமேயே) இலைகளும் மலர் இதழ்களும் விரிந்து செடி விழித்து விடுமாம். ஆகவே சூரிய வெளிச்சமில்லா விடத்துச் செடிகளின் இலைகளும் இதழ்களும் கூம்புமென்று கூறுவது தப்பென்று விளங்குகிறதல்லவா?

மனிதர் வாழ்வுக்கும் தாவர வாழ்வுக்கும் மிகுந்த ஒற்றுமை உண்டு. நாம் உண்டு உடுத்துப் பெருகுவது போலவே தாவரங்களும் உண்டு உடுத்து விவாகம் செய்து பெருகுகின்றன.

ஆனால் நமது வாழ்க்கையில் மனித நிர்மிதமான எத்தனையோ ஆசாரங்களும் அனுஷ்டானங்களும் ஆதிக்கம் பெற்றுக்கிடக்கின்றன. தாவர வாழ்க்கையில் அத்தகைய ஆடம்பரங்கள் ஒன்றும் இல்லை. உண்மையான இயற்கைவாழ்வு நடத்துகின்றன. தாவர வாழ்க்கை வரலாறுகள் விஸ்தாரமாக வெளியாகும்போது மனித வாழ்க்கையின் அலங்கோலங்கள் செவ்வையாக வெளியாகும். அந்த நன்னாள்—அந்தப்பொன்னாள்—தாவர சாஸ்திரிகளின் பேருதவியால் அடுத்தடுத்து வந்துகொண்டிருக்கின்றது. செயற்கை அறிவால் இறுமாந்து கிடக்கும் மக்காள்! நீவிர் தாவர வாழ்க்கையின் இயற்கை அழகைக் கண்டு தலை குனியும் காலத்தை எதிர் பார்த்திருங்கள்!

நூறு வருடங்களுக்கு முன் பிரிட்டனில் வார மொன்றுக்கு 170,000 பத்திரிகைகள் விற்கப் பட்டனவாம். இப்பொழுது 75,000,000 பத்திரிகைகள் விற்பனையாகின்றனவாம்.

* * * * *

ஒரு மனிதன் பேசுங் காலத்து அவனது உடம்பின் 44 விதமான தசை நார்கள் வேலை செய்வதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

உருத்திர சூக்தம்

(இருக்குவேதம் மண்டலம் 2, சூக்தம் 23.)

திரு. த. ராமகிருஷ்ண விச்வகர்மன்.

இதயத்துறையும் இறைவனை வழிபடுக.

11. வேடன் கொல்லத்தக்க விலங்குகளென்றஞ்சாது முழைஞ்சினுட் புகுந்து தன் வயப்படுத்தி அவற்றை அடையுமாறு போல, பரமேசுவரனைத் தத்தம் முழைஞ்சிலாம் இதயக்குகையினுள் துருவிக் காண்டல் வேண்டும். இறைவனைத் தம் இதயத்துத் துருவிக் கண்டு, அவனது பேராற்றலைச் சிந்திப்போராகிய ஆத்திகர் இன்ப மெய்துவர். பிற நாத்திகர் அழிவுறுவர்.

இதயத்துறையும் இறைவனை ஆராய்ந்து கண்டு வழிபடுக வென்று இச்செய்யுள் உணர்த்திற்று. யாங்ஙனமெனின், விலங்குகளை வேட்டையாடச்செல்லும் வேடுவன் அங்குள இங்குள வெனயாங்கணும் திரிந்தலைந்து இறுதியில் அவைகளுறையும் குகையினுள் சென்றடைகின்றான். அங்ஙனமே, வீடுபேறு விழைவார்-விடுதலை விரும்புவார்—அவன் நிலனன்று,—ஞாயிறன்று, பிறிதிப் பொருளுமன்று என ஒவ்வொன்றாய் நுண்மாணுழை புலத்தானாய்ந்து முடிவாக அவன்உறையும் இதயக்குகையில்-நெஞ்சகத்து—அவ்விதயத்து உறைவானாகிய பரமனைத் தேடிக்காண்பர். இவ்வகையாக இச்செய்யுள் இறைவனை வழிபடுமாறுணர்த்து கின்றமையான் மிக்குயர் வுடைத்து.

இறைவனை வழிபடுதலானும் காதலித்தலானும் உடற்கு நலனும், உயிர்க்கு அமைதியும் பெருகும். இறைவனிடத் தன்புறு சிந்தையர் ஒளிபெற்றுப் பிணியின்றி அமைதியுடையராய் ஆயுட் பெருக்கமடைவர். எனவே இறை வழிபாடு உடல் நலனளிப்பதானும் பெரும்பய னுடையது. அறநெறி யொழுகு வாரெவரும் இறைவனை வழிபட்டு நலனும் புகழும் உயர்வு மெய்துக. இறைவனை இறைஞ்சுதலால் பிணிகளும் அகலுகின்றன.

11. Praise him the famed, who sits upon the car-seat.
The young, the fierce. like a dread beast, a slayer,
When praised, be gracious. Rudra, to the singer:
Let thy darts pass us and lay low another.

தந்தை மகற்றொடர்பு.

12. குழந்தை அன்பினால் தந்தையை அணுகுமாறு, யாம் பேரன்பினராக இறைவனை வழிபடுதல் வேண்டும். இறைவனது பேராற்றலைச் சிந்தித்து இடைவிடாது இறைஞ்சுவோர் தம் குறைகளகற்றுந் திறன் படைத்திடுவர்.

13. தூயனவாக, அமைதி அளிப்பனவாக, பிணியுறாது காப்பனவாக மனதைச் செம்மைப் படுத்தி, உடல்நலன் இனிது பயப்பனவாகிய நன்மருந்துகளை உட்கொள்க. இறைவன் தண்ணளியால் இத்தகைய எண்ணிக்கையற்ற நன் மருந்துகள் நிலவுகின்றன.

மகன் தந்தையைக் கண்டு களிப்படைதல் போல, இறைவனை யாங்கணும் உணர்வானுணர்ந்து நுகர்ந் தின்புறுகின்ற பேரன்பினர் எஞ்ஞான்றும் அகமகிழ்வெய்துவர். இறைவனும் மக்களும் தந்தை மகற் றொடர்புடையர். மருத்துவனும் பிணியாளியும் இத்தகைய அன்புணர்ச்சி உடையோராதல் வேண்டும். எலியும் பூனையும் போலிருத்தலாகாது. தூய, அமைதி தரும் நன்மருந்துகள் அளித்தல் வேண்டும்.

12. I bow down like a son before his father,
Who with good will comes nigh to him, O Rudra,
I praise the true lord, of much wealth the giver.
To us thou grantest remedies when landed.

13. Those remedies of yours, the pure, O Maruts,
That are most wholesome, mighty ones, and potent,
That Manu chose in ancient days, our Father:
Those I desire, and Rudra's balm and blessing.

தூய சிந்தனையுந் தண்டமும்.

14. பரமேசுவரனது தண்டனை எஞ்ஞான்றும் நம்மை அணுகாதவாறு நல்லொழுக்க முடையாதல் வேண்டும். எல்லா வகையான தீய சிந்தனைகளும் நம்மினின்று யாண்டும் அகன்றிடுக. பொருளாளர்க்கு மனக்குழப்பம் தோன்றற்க. யாவர்க்கும் நலஞ் சிறந்திடுக.

15. இறைவன் யாவரையும் காப்பாற்றி வளர்க்கின்றவனும், பேராற்றலுடையானும், பேரறிஞனும், இடுக்கண் ஒழிப்பவனுமாக இலங்குகின்றான். அவனது சினத்திற் கிலக்காகாதவாறு யாவரும் நன்னெறி பூண்டிடுக. நல்லறிவு படைத்து வாழ்க்கைப் போரில் வீரனாக மிளிர்ந்து பெருஞ் செயல்க ளாற்றுக.

தீய சிந்தையரகத்து இறைவன் இறையும் உறையான். இறைவனது தண்டனைக் கிலக்காகாது, தீயன சிந்தித்தல் ஒழித்திடுக. இறைவன் நம்மை வெகுண்டழித்திடா வண்ணம் தக்கநெறி கைக்கொள்க. தீயனவகற்றி நன்மதி கொள்ளுதலால் பரமேசுவரன் சினமின்றிக் கடிந்திடாது யாவர்க்கும் இன்பம் நல்குவன். எனவே யாவரும் நன் நினைவுகள் நினைந்திடுக. நல்லெண்ணத்தால் நல்லறிவும், நல்லறிவால் நல்லொழுக்கமும், நல்லொழுக்கத்தால் நல்லின்பமும் பெறுவர். நல்லின்ப மெய்தற்கு நல்லெண்ணமே காரணமாகலான் பிறதீய எண்ணங்களை யொழித்தல் இன்றியமையாதனவாம்.

14. May Rudra's missle turn aside and pass us,
May the fierce Rudra's great ill-will go by us.
Relax thy rigid bow to save our patrons;
Spare, O thou God of bounty, child and grandchild.

15. So brown-hued, mightly Rudra, widely famous,
Here to our invocations be attentive,
As not, go O God to rise in wrath and slay us.
May we speak loud with heroes in the synod.

இதுகாறும் புலப்படுத்தியவற்றைத் தொகுத்துக் காணுங்கால் பெறப்படும் பொருள்களாவன,—உயிர்கள் யாவும் உடல் நலன் உறுதற்குக் கதிரவனொளி இன்றியமையாத தென்பதூஉம்; அவ் வொளியால் தீயனவகன்று உடல் வளமுற மருந்துண்ணுமாறும், அவ்வொளி மனத்துட் பரவித் தீயன விலக்கி உளத்தூய்மை பயத்தலால் ஆயுட் பெருக்க முண்டா மென்பதூஉம், உடலுரத்தானும் அறவொளியானும் தீயன சிந்தித்த லகற்றிச் சுதந்தரராக நோயின்றி வாழ முயலுதல் வேண்டு மென்பதூஉம்; தன்னல மின்றிப் பொய்ப் புகழ் பரப்பாது, சான்றோர் வழிச் சென்று, நன் னீர்மை கடைப்பிடித்து மெய்ப்புகழ் பரப்புதல் சிறப்புடைத் தென்பதூஉம்; எவ் வகைப் பேறுடையோ ராயினும், அகந்தை

பொழித்தல் வேண்டு மென்பதூஉம்; உள்ளம் உரை செயல்களை நல்வழி உய்த்து யாவர்க்கும் மேம்பட நின்று தலைமைத் தன்மை பெற்றுப் பிறரையும் அவ்வழி உய்த்தல் வேண்டற்பாலதா மென்பதூஉம்; குறைகள் நிகழ்வதே பிணிக்குறு காரணமா மென்பதூஉம், அக்குறைகள் புலன்களானும், மக்கட் குழுவிற்கு அறிவர் மறவர் வணிகர் சிற்பிகளானும், உலகிற்கு நீர் காற்று முதலிய வற்றான் நிகழ்த்தப் படுவனவாமென்பதூஉம், அக்குறைகளொழித்தற்கு மானதமுறை மருந்துமுறை நீர்முறை முதலியனவா மென்பதூஉம், பிற அறிவு ஆற்றல் அமைதி அடக்கம் ஒடுக்கம் நற்பழக்கம் செழுமை நோயின்மை உடல்வளம் இன்பம் துன்ப நீக்கம் குறைகளகற்றும் வன்மை வெயில் காய்தல் நூறாண்டு வாழ்வு கொள்ளத் தக்கன வென்பதூஉம், புலன்களா லுண்டாம் குற்றங்கள் புலன்களின் உரமின்மையால் மாறுபட்ட மரணம் இறுமாப்பு இழிதகைமை வெகுளி பகைமை தீய எண்ணம் பிற குறைகளை எதிர்த்தல் பொய்ப்புகழ் தவிர்த்தற்குரியனவா மென்பதூஉம்; இக்குறைகள் அனைத்திற்கும் பிறப்பிடமான பிறவிப் பிணியைத் தவிர்ப்பான் இறைவ னொருவனேயா மென்பதூஉம்; அவ்விறைவனது பேராற்றலே யாண்டும் நிலவி யாவற்றையும் இயக்குகின்றன வென்பதூஉம்; யாண்டு முறையும் அவ்விறைவனை இதயத்துள் துருவிக் கண்டு வழிபடுக வென்பதூஉம்; அவ்விறையே மக்கட்குத் தந்தையாகி யாவும் உதவுந் தண்ணளியா னென்பதூஉம்; அவ்விறை உலகவியல்பிற்கும் உண்மைக்கும் மாறுபட ஒழுகுவாரை ஒறுத்துத் தண்டிக்கும் மா நீதிபதியா மென்பதூஉம்; நன்னெறி உடையார்க்குத் துணை நின்று நல்வழிப் படுத்துவா னென்பதூஉம் பிறவுமாம்.

இருக்கு வேதத்து உருத்திர சூக்த மந்திரங்களின், இவ் விளக்க வுரைக்கும் ஆங்கில மொழி பெயர்ப்புக்குமுள்ள வேறுபாடு காண்டற் பொருட்டு அவ்வவ் மந்திரவுரையின் கடைப் பகுதியில் திரு. மெக்டனெல் (A. A. Macdonell) ஆங்கிலப் பெயர்ப்புச் செய்யுளும் காட்டப் பெற்றிருக்கின்றன. அவற்றை அறிஞர் ஆராய்ந்து காண்க.

மதுசாரம்

I

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது.)

காபி ரைட்.

மதுசாரம் மூளையின் கண்ணறைகளைக் கெடுக்கின்றது.

மனித தேகம் மிக விசித்திரமாக அமைக்கப் பெற்றதென்றும், அது உயிருள்ள கண்ணறைகளின் பெருங் கூட்டத்தாலாகியதென்றும் நாம் முன்னமே தெரிந்திருக்கின்றோம். இக் கண்ணறைகள், மூளையின் வெண்ணிறப் பொருளில் மாத்திரம் 1,200,000,000 இருக்கிறதெனச் சாஸ்திர ஆராய்ச்சி செய்தவர்கள் கணக்கிட்டிருக்கின்றனர். தேகத்திலுள்ள எல்லாக் கண்ணறைகளிலும், மூளையிலும் நரம்புமண்டலத் (Nervous system) திலுமுள்ள கண்ணறைகள் அதி முக்கியமானவை, அதி மேன்மையானவை. ஆவை, எளிதில் சேதப்படக் கூடியவை. சேதப்படின் அவை மீண்டுஞ் சுகப்படுவது மிகக் கடினமாகும்.

தேகத்தையாளுந் தலைவன்.

தேகத்தின் எல்லாப் பகுதிகளையும் அளவுபடுத்தி யாளவும் அப்பகுதிகள் ஒன்று சேர்ந்து உழைக்கவும் செய்ய வேண்டுமல்லவா? அவ்வாறு செய்வதற்கு அவற்றின் மேல் ஒரு தலைவன் இருக்க வேண்டும். அத்தலைவன், தேகத்தின் பல வுறுப்புக்களை வேலை செய்ய வைப்பதுமன்றி, ஒவ்வொரு உறுப்பும் சரியான வேலை செய்யவும், அவ்வேலை சரியான காலத்தில் செய்யவும் வைக்க வேண்டும். ஒன்றும் உண்ணாதிருக்கும் போது, சீரணவுறுப்புக்கள் வேலை செய்யத் தொடங்கினால் அவற்றின் வேலை பிரயோசன மில்லாமற் போகும். தேகம் உஷ்ணமாயில்லா திருக்கும் போது வியர்வைக் கோளங்கள் (Sweat Glands) உடம்பின் மேல் வியர்வை கொட்டத் தொடங்கினால், அவற்றின் வேலை உபயோக மில்லாமற் போயினும் தேகத்தில் கெடுதலுண்டாகக் கூடும். இசிவு அல்லது சன்னி (Convulsions) யில் இழுப்பது போலத் தாறுமாறாக உடம்பில் எல்லாத் தசைகளுமிழுக்கவும் உடம்பை முறுக்கிக் குலுக்கவுந் தொடங்கினால், தேகம் பூமி மேல் நிற்க முடியுமா? முடியாது. தேகம் தரையில் வீழ்ந்து கிடக்க

வேண்டியதுதான். அவ்வாறு நடக்க வொட்டாமல் ஆளுவதற்குத்தான் ஒரு தலைவன் வேண்டும். அத் தலைவன் யார் என்று பின் வருவனவற்றால் தெரிந்து கொள்வோம்.

நரம்பு மண்டலம்.

மூளை (Brain), முள்ளந் தண்டுக் கொடி (Spnal Cord) இவற்றினின்றுந் தோன்றுகிற நரம்புகளே நரம்பு மண்டலமாம். முள்ளந் தண்டுக் கொடி, லெட்பென்ஸிலைப் பார்க்கிலும் சிறிது தடிப்பாயிருக்கும். மூளை, தலையோட்டிற் குள்ளிருக்கும் அறை முழுதும் நிரம்பியிருக்கும் உறுப்பாம். மூளை, முள்ளந் தண்டுக் கொடியினும் அதிக நிறையுள்ளது. நரம்பு மண்டலத்தின் பெரும்பாகம் மூளையிலடங்கி யிருக்கின்றது. ஆதலால்,

மூளையே தலைமையாகும். நாம் ஓடும்போதும், நடக்கும் போதும், மன வெழுச்சியால் (Emotions) சிரிக்கும் போதும், அழும் போதும் அதற்குரிய தசைகள் முதலியவற்றை அசைக்கச் செய்வன மூளையும் நரம்பு மண்டலமுமாம். நம்மைச் சூழ்ந்துள்ள, உலகத்திற் காணப்படும் இயற்கை விநோதங்களை நாம் கண்டு களிக்க நம்முடைய மனத்தைத் தூண்டுவன மூளையும் நரம்பு மண்டலமுமேயாம். அவை, இது நல்லது இது கெட்டது என்ற வித்தியாசத்தை நமக்குத் தெளிவாய்த் தெரிவிக்கின்றன. நாம் எதனை யேற்றுக் கொள்ளவேண்டும், எதனை விலக்க வேண்டு மென்பதை, அவை நமக்குக் கற்பிக்கின்றன. நாம் உண்ணும்போது சீரண உறுப்புக்களை வேலை செய்ய வைப்பது மூளையும் நரம்பு மண்டலமுமேயாம். அவைகளே இருதயத்தையும் இரைப் பையையும் நடைபெறச்செய்கின்றன. இவ்விதமாகத் தேகத்தைமுற்றும் மட்டுப் படுத்தியாளுவது மூளையும் நரம்பு மண்டலமுமேயாம். அந் நரம்பு மண்டலம் தேகத்தின் எல்லா உறுப்புக்களை யாளுவதும், அவ்வுறுப்புக்கள் ஒன்று சேர்ந்து பொது நன்மைக்காக ஒத்துழைக்கச் செய்வதும் அதன் முதல் வேலையாம்; அது மனத்திற்குக் கருவியாயிருந்து வேலை செய்வது அதன் இரண்டாவது வேலையாம். ஆகவே நம்முடைய வாழ்க்கை இன்பம் முற்றும் மூளையைப் பொறுத்திருக்கின்றது.

நரம்பு மண்டலம், உடம்பிலுள்ள உறுப்புக்கள் ஒன்றிலே யொன்று பற்றியிருக்கும்படி அவற்றை யொன்று பிணைக்கின்

றது. அதனல், அது உண்மையில் டெலிபோன் (Telephone. தூரசிரவண யந்திரம்) யந்திரத்தையும், மின்சார யந்திரத்தையும் (Telegraph) ஒத்திருக்கின்றது. டெலிபோன் கம்பிகள் அதன் மத்திய ஆபீஸின் மூலமாய்ப் பல வீடுகள் தோறும் இணைக்கப்பட்டிருப்பது போல, மூளை, முள்ளந்தண்டுக் கொடி இவற்றின் மூலமாய் உடம்பின் பல பாகங்கள் இணைக்கப் பட்டிருக்கின்றன. உடம்பின் பல பாகங்களிலுள்ள ஒவ்வொரு கண்ணறையும் நரம்புகளால் நிரம்பப் பெற்று உடம்பெங்கும் வலை பின்னியது போல நரம்புகள் சிக்கலா யிருக்கின்றன. மத்திய ஆபீஸைப் போலிருந்து வேலை செய்வதற்கு மூளையும் முள்ளந்தண்டுக் கொடியு மில்லாமல் உடம்பின் எல்லாக் கண்ணறைகளையும் இணைக்க முயற்சி செய்தால் நரம்பு மண்டலம் எத்தகைய அசாத்திய சிக்கலாயிருக்கு மென்பதை நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

(1) மூளை எவ்வாறு மிக முக்கியமான பகுதி யாகின்றது ?

ஒரு மனிதன் காலையேனும் அல்லது கையையேனும் இழந்திருக்கலாம். அவனே குருடனுக்வாவது இருக்கலாம். ஆனல், அவன் நல்ல மூளையை உடையவனு யிருப்பதால், அவன் யாவரும் வியக்கத்தக்க அருமையான பொருள்களைச் செய்கின்றான். கையில்லாத வொருவன் காற் பெருவிரலா லெழுதுகிறான். கையில்லாதவொரு பெண் தன் பற்களின் நடுவில் பேனவைப் பிடிக்கவைத்து எழுதுகிறாள். இவ்விதப் பழக்கம் எவ்வாறிருக்கின்றதெனின், மூளையானது குருடனைப் பார்த்து நீ உன் பார்வையை இழந்தாய், நீ என்னை நம்பு. நீ பார்ப்பதற்கு வேறு வழி காட்டுகின்றேன்" என்று சொல்வதுபோ லிருக்கின்றது. மூளையும் அப்படியே செய்கிறது.

ஏனெனின், மூளையானது மனத்திற்குக் கருவியா யிருப்பதால் ஒருவன் எவ்வளவு துன்ப முள்ளவனுயிருப்பினும் நிர்ப்பாக்கியனுயிருப்பினும் அவன், தானே மேலான நிலைக்கு வருவதற்கு அவனைத் தூண்டுகின்றது. அது ஒருவனுடைய கஷ்டங்களை ஒழிக்கவும், விஷயங்களை ஆராய்ச்சி செய்யவும், துன்பங்களைப் பொறுக்கவும், தைரியமாயிருக்கும் சக்தியைக்கொடுக்கிறது. மனிதனுடைய மூளை, சிருஷ்டிக் கிரமத்தில் மிக உயர்ந்த பொருளாகும். டனமும் உலகத்தில் மிகச் சிறந்ததாகும். (தொடரும்.)

ராவ் சாஹேப் ஆர். சுப்பையா நாயுடுகோரு,

இவர் 1885-ல் நெல்லூர் ஜில்லாவில் பிறந்தவர். 1904-ல் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் படித்து பி. ஏ. பட்டம் பெற்றார். அடுத்த வருஷத்தில் சர்க்கார் ரெவினியூ இலாகாவில் உத்தியோகத்தி லமர்ந்தார். 1917ல் டிபுடி கலெக்டரானார். பிறகு 1921ல் செங்கல்பட்டு ஜில்லாவில் தொழிலாளர் உதவிக் கமிஷனராக இருந்தார். அடுத்த வருஷம் ராமனாதபுரம் ராஜாவிற்கு திவானாக இருந்தார். அதே வருஷத்தில் சென்னை ஸ்தல ஸ்தாபன இலாகாவில் உதவிக் காரியதரிசியாக இருந்து வேலை பார்த்தார். 1925ல் பிரிட்டிஷ் மலாய் ஏஜண்டாக நியமிக்கப் பட்டார்.

சன் யெட் சன்

நெல்லை. சு. வெங்கட ராமன் எழுதியது.

பெருத்த கஷ்டங்கள் வந்து அவைகளைச் சாமான்ய ஜனங்களால் நிர்வகிக்கக்கூடா நிலை ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலத்தில் ஏற்படுவதுண்டு. இந்நிலையானது கஷ்டத்தின் அளவையும் கொடுமையின் போக்கையும் பொறுத்துப் பெரிதாகவும் சிறிதாகவும் காட்டும். இத்தகைய சமயத்தில் ஒவ்வொருவரும் தன் தன் காரியமே பெரிதாய்ப் பார்ப்பரே யன்றி பிறர் நன்மையையும் கருதவும் செய்யார்கள். இந்நிலையில் மன்னுயிரைத் தன்னுயிராய்க் கருதி, மனிதர்கள் கருணையே உருவாய் வந்தவர்கள் வீரத்தோடும் தீரத்தோடும், யுக்தி புத்தி அனுபவங்களால் கஷ்டநிலையை ஒழித்து நல்ல நிலை ஏற்படுத்தப்பார்த்துச் செயல் புரிவார்கள்.

இங்ஙனம் நிலைகள் ஏற்பட்ட காலத்தில் செயல் புரிபவர்கள் நம் நாட்டில் மகாத்மாவும்—சைனாவில் சன் யெட் சன்னு மாவார்கள். இவர்கள் நாட்டிலே உண்டாகும் வறுமையை வெறுமையாய்ச் செய்து இன்புடன் களித்து வாழ மேற்கண்டபடி உழைப்பவர்களாவார்கள். இவர்களில் முன்னவரின் சரிதம் தற்பொழுது சத்திய தரிசனம் என்பதாக அன்னவரே எழுதி வருகிறார்.

பின்னவரின் சரிதத்தை நாம் இனித்தான் அறிய வேண்டும். தற்பொழுது சைனா சுதந்தர மடைந்துள்ள நிலைக்கு அதற்குக் காரண பூதரான இவரின் சரிதத்தை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. வடபகுதித் தலைவராய் நின்று பல தொல்லைகள் விளைத்துவந்த சாங்சோலின் மாண்டார். எனவே சைனாவின் தென்பகுதியார் முழுவலிமை படைத்துச் சுதந்தரம் அடைந்தனர். சைனாவில் உள்நாட்டுக் கலகங்கள் ஒழியவும் சைனா முழுமையுமே பூரண சுயேச்சை அடையவும் வழிகாட்டியாய் முதன்மையில் நின்றவர் சன் யெட் சன்னே யாவர்.

காலம் மிக நெருக்கடியாய் நின்ற காலத்தில் சன் யெட் சன் முன் வந்து செயலாற்றத் தொடங்கினார். இவர் சைனாவின் அரிய பெரிய தலைவராய், பிறப்பிலே சீனராய், மதத்திலே கிறிஸ்தவராய், பள்ளிக்கல்வி அளவிலே வைத்தியராய், வேலையிலே அடி-

யார்க்கு அடியாராயிருந்து தாய் நாட்டின் நலத்தைக்கோரி 30 ஆண்டுகளுக்கு மேல் பலவிதத்திலும் தொண்டு புரிந்துழைத்தார். இன்னும் விரித்துக் கூறின் மனிதசமூகத்தின் முன்னேற்றத்திற்கே தொண்டு புரிந்தவரென்னலாம்.

வைத்தியத்தொழில் செய்பவர்களில் சொந்தப் பிழைப்புக்காக பிறருக்குத் தீங்கு நினைப்பவர்களு முண்டு. ஆனால் இவர் தேசத்திற்கே தொண்டு செய்தார். ஜெரூசலத்துக்கோ-ரோமுக்கோ போய்த்தான் தன்னை அறியலாம் என்ற கிறிஸ்தவர் கொள்கையை அகற்றி உண்மை நிலை அறிந்து ஒப்பற்ற தொண்டு புரிந்தார்.

அடிமை வாழ்க்கையில் கிடந்து மிக வாடும் ஒரு நாட்டிலே பிறப்பவர்களுக்கு மிகமிக முக்கியமான கடமை ஒன்று உளது. அதுவே அடிமை வாழ்க்கையை நீக்க முயற்சிப்பதும் நீக்குவதுமாகும். அடிமை வாழ்க்கையிலும் கேவல வாழ்க்கையும் உளதோ உலகில்? ஆதலின் சுதந்தர மிருப்பின் எல்லா நன்மையும் இன்பமும் உண்டு. தன்னைத்தானே அறிவதற்குச் சுதந்தரமே வேண்டும். இதைத்தான் சன்யெட்சன் அறிந்தார். அதனாலேயே இவர் ஜெரூசலம் முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்றாரில்லை.

சன்யெட்சனுக்குத் தன் தாய் நாட்டின் மீது அளவிலாபற்று இருந்தது. தீமை ஒழியவும், தீயவர் மாயவும், நன்மை பெருகவும், நல்லவர் ஓங்கவும் இவர் வேலை செய்தார். சைனா அக்காலத்தில் மிக சீர் கேடான நிலையில் இருந்தது. ஜனங்களிடை கொடிய வழக்கங்கள் பரவி யிருந்தன. இவைகளை ஒழிக்க சன்யெட்சன் தனது அரிய வேலையைச் செய்துபோகையில், இவருக்கும்—மற்றவர்களுக்கும், நற்செயல்களுக்கும் இடையூறுகள் பல ஏற்பட்டு கடைசியில் இனிது முடிவதுபோல், ஆண்டவன் அருளால் ஒருவாறு இவர் காலத்தில் சீருற்று தற்பொழுது பூராவும் சீர்பெற்றது. இவரை மாய்க்க விரும்பியவர்களும் தங்கள் தங்கள் செயல் முடிவுறாது பொயினர்.

இவர் 1911-ம் ஆண்டில் பலாத்காரமின்றியும், உதிரப்பெருக்கின்றியும் பெருத்த தேசியக் கிளர்ச்சியை ஆரம்பித்து வெற்றி பெற்றார். இவரது கிளர்ச்சியின் பயனாக சைனாவை ஆண்டுவந்த மாஞ்சு வம்ச ஆட்சி ஒழிந்து பூரண சுதந்தரத்தைச்சைனா அடைந்தது. அவர்தான் முதன்முதலாக அத்தேச அரசாங்கத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்நாட்டிற்கு

இவர் சுமார் 30- ஆண்டுகள் வரை தொண்டு புரிந்துள்ளார். பலாத்காரத்தைத் தடுக்கும் பொருட்டு யுவான் ஷிகாய் என்பவருக்காக அவர் தனது அரசாங்கத் தலைவர் பதவியை விட்டு விட்டார். விடவும் ராணுவ வீரரான யான் சீகாய் அப்பதவியை ஏற்று நல்ல திறமையுடன் வேலை செய்யாது, தானே அந்நாட்டின் மன்னராக ஆக விரும்பி சைனாவின் முற்போக்கை யெல்லாம் கெடுத்துவிட்டார். எனவே அவர் அப்பதவியிலிருந்து 1916-ல் நீக்கப்பட மனவாட்டமுற்றவராய் மாண்டுபோனார். சைனாவில் வடக்குப் பாகமென்றும், தெற்குப் பாகமென்றும் இரு பகுதிகள் உண்டு. வடபகுதியினர் தேசபக்தி இல்லாதவர். தென் பகுதியினர் தேசபக்தி உள்ளவர். சன் யெட் சன் அவரது சகாக்கள் யாவரும் தென் பகுதியினரே. தற்பொழுது அவ் வட பகுதித் தலைவர் சாங் சோலின் மாண்டதால் சைனா பூரண சுதந்தரமடைந்தது-சண்டை சச்சரவுகளை வெளி நாட்டினர்கள் கண்டு களிக்க விரும்பினரேயன்றி சமரசப் படுத்த விரும்பினரில்லை. மேலும் சன் யெட் சன் தெற்குச்சைனாவில் குடியரசு அரசாங்கத்தைத் தனது விடாமுயற்சியாலும், ஊக்கத்தாலும், அரிய செயலாலும் ஏற்படுத்தினார். இவர் கீழ்த்திசை நாடுகள் செய்து முடிக்க வேண்டிய காரியங்களைப் பற்றிச் சதா நினைந்து கனவு கண்டு, அதனைச் செய்து முடிக்க அரும்பாடு பட்டார். அதிகாரத்திற்கோ, பதவிக்கோ ஆசையின்றி மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்தலே தனது அரும் பெரும் கடமையாகக் கொண்டு வாழ் நாள் முழுதும் தேசத் தொண்டு செய்தார். தனக்கென வேண்டா பிறர்க்கென வாழும் வாழ்க்கை வாழ்ந்தார். இன்னவரின் அரிய செயலால் இவர் சிந்திய உதிரமே இப்பொழுது சீனர் அனுபவிக்கும் இன்ப சுதந்திரமாகும். ஆகவே சீனர் இவருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றனர். அன்னவர் இறந்தார்: எனினும் புகழுடம்பு புகழெய்தி நிற்கிறது. தோன்றிற் புகழொடு தோன்றுக—ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு தனது தாய் நாட்டிற்குத் தொண்டு புரிதல் வேண்டும். இதுவே கடமைகள் யாவற்றினும் முதன்மையானது. தேச பக்தர் வாழி : தேசத்திற்குத் தொண்டு புரிந்தோர் வாழி.

தமிழ் நாட்டு வள்ளல்.

(ஆசிரியர்.)

சேர சோழ பாண்டிய மன்னர்கள் மறைந்த பின்னர் தமிழ் நாட்டில் தனவைசிய சீமான்களே அறம் வளர்த்து வருகிறார்கள். மூவேந்தர்கள் தமிழ் நாட்டில் மட்டுமே அறப்பணி செய்து வந்தனர். தனவைசியர் அறத் தொண்டோ இந்தியா முழுதும் பரவியிருக்கிறது. காசி முதல் கன்னியாகுமரி வரை அவர்களது தருமத்துக்கு இலக்காகாத தீர்த்த ஸ்தலங்களும் ஆலயஸ்தலங்களும் இல்லை யென்றே சொல்லலாம். ஆலய தருமங்கள் தற்காலத்துக் கேற்றவை யல்லவென உணர்ந்த ஆண்டிப்பட்டி ஜெமீன்தார் காலஞ் சென்ற திவான் பகதூர் பெத்தாச்சி செட்டியாரவர்கள் முதன் முதலாக கல்விவளர்ச்சிக்கான விஷயங்களில் பொருளுதவ முன்வந்தனர்.

திருச்சி நாஷனல் கல்லூரி நிதிக்கு 50,000 ரூபாவும் மைலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் விடுதிக்கு 15,000 ரூபாவும் நமது பெத்தாச்சி செட்டியார் வழங்கினார். மதுரைத் தமிழ்ச் சங்கம் கரந்தைத் தமிழ்ச் சங்கம், பாளயங் கோட்டை சைவ சபை ஆகிய தமிழ் வளர்க்கும் ஸ்தாபனங்களுக்கு அன்னார் செய்த பொருளுதவியை தமிழுலகம்நன்கறியும். தமிழ்மொழி வளர்ச்சிக்காக நமது பெத்தாச்சியைப்போல் பொன்மாரி பொழிந்த சீமான்கள் சரித்திர காலத்திலே தமிழுலகத்தில் வேறெவருமில்லை. பெத்தாச்சி தருமம் அத்துடன் நின்றுவிட வில்லை. சென்னை கோஷா ஆஸ்பத்திரிக்கு 20,000 ரூ. உதவினார். கரூர்ப்பக்கமுள்ள ஒரு கிராமம் தீப்பற்றி யெரிந்து அக்கிராமத்து ஜனங்கள் குடியிருக்க வீடில்லாமல் கஷ்டப் படுவதைக் கண்ட நமது வள்ளல் 75,000 ரூபா செலவு செய்து ஒரு புதுக்கிராமம் அமைத்தருளினார். அவ்வூர் பெத்தாச்சிநகரம் என்னும் பெயரால் இன்றும் நிலைபெற்றிருக்கின்றது. இன்னும் அம்மகான் செய்த தருமங்கள் அனந்தம். 24 வயதுக்குள் 45 லக்ஷம் தருமம் செய்தாரென்றால் அவரது வள்ளன்மையை என்னென்றுரைப்பது.

அந்தப் பெத்தாச்சி செட்டியாரின் சிறிய தந்தையாகிய சர் அண்ணாமலை செட்டியார் இன்று தமிழுலகத்திலே தனிப் பெரும்

வள்ளலாக விளங்குகிறார். அவர், சுமார் 17 லட்சம் ரூபா செலவு செய்து சிதம்பரத்தில் தம் தாயார் பெயரால் மீனாக்ஷி சர்வ கலா சாலை நிறுவி நடத்தி வருவதை நம்மவர்கள் அறிவார்கள். அதை ஒரு சர்வகலா சங்கமாக்க சர்க்கார் 20 லட்சம் ரூபா உதவினால் தாமும் 20 லட்சம் ரூபா உதவுவதாக சர். அண்ணாமலை செட்டியார் சென்னை சர்க்காருக்குத் தெரிவித்திருந்தனர். சென்னை சர்க்கார் சர். அண்ணாமலையின் வேண்டுகோளை ஒப்புக்கொண்டு விட்டதாக இப்பொழுது அறிக்கை வெளி வந்திருக்கிறது.

சர். அண்ணாமலை செட்டியார்.

சர்க்கார், கலா சங்க நிதிக்கு 20 லட்சம் ரூபாவும் கட்டடச் செலவுக்கு எழெட்டு லக்ஷம் ரூபாவும் கொடுக்க இசைந்திருக்கிறார்கள். சர்வகலா சங்க வருமானம் சர்வகலா சங்கச் செலவுக்குப் போதாதிருக்குமாகையால், கலா சங்கச் செலவுக்காக மாகாண வருமானத்திலிருந்து வருஷா வருஷம் ஒன்றரை லட்சம் ரூபா வழங்குவதாகவும் சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக ஒரு மசோதா தயார் செய்யப்பட்டு விரைவில் சென்னை சட்ட சபைக்கு வரும்.

கல்வி வளர்ச்சிக்குப் பொருளதவி செய்த சீமான்களில் சர். அண்ணாமலை செட்டியாரே தலை சிறந்து விளங்குகிறார். இதற்கு முன் கல்வி வளர்ச்சிக்காக இவ்வளவு பெருந்தொகை ஒருவரேனும் வழங்கியதில்லை. பெங்களூர் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிக் கல்லூரிக்கு டாட்டா 35 லட்சம் ரூபா கொடுத்தார். கல்கத்தா சர்வ கலா சங்க ஆராய்ச்சிச் சாலைக்கு டாக்டர் ராஷ் பிகாரி கோஸ் 20 லட்சம் ரூபாவும், சர் தாரகாநாத் பாலித் 15 லட்சம் ரூபாவும், வழங்கினர். ஆக்ரா உயர்தரக் கலாசாலைக்கு ராஜா பலவந்த சிங் 12 லட்சமும், காசி க்ஷத்திரிய கலாசாலைக்கு ராஜா உதய பிரதாப சிங் 15 லட்சமும், காசி வித்யா பீடத்துக்கு பாபு சிவப் பிரசாத குப்தா 15 லட்சம் ரூபாவும் அளித்துள்ளார்கள்.

சர். அண்ணாமலையின் தர்மம் மேலே கூறிய தருமங்களை யெல்லாம் விழுங்கி விட்டது. 40 லட்சம் ரூபா பெறுமான சொத்தை வித்யா தானத்துக்காக உதவிய பெருமை சர் அண்ணாமலை செட்டியாருக்கே சொந்தமானது. ஒரு தனிச் சீமானால் ஒரு சர்வ கலா சங்கம் ஸ்தாபனமான புகழும் அவருக்கே சொந்தமானது.

சர். அண்ணாமலையின் தமையனார் காலஞ்சென்ற திவான் பகதூர் ராமசாமி செட்டியார் பல லட்சம் ரூபா செலவு செய்து சிதம்பரம் கோவிலைப் பழுது பார்த்து கும்பாபிஷேகம் செய்ததன்றி, சிதம்பரத்தில் தண்ணீர்க்குழாய் போட சிதம்பரம் நகர சபைக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும் கொடுத்தார்கள். சர். அண்ணாமலை குடும்பம் தருமம் செய்வதில் பெயர் போனது.

அப்புனித குடும்பம் இன்னும் பல்லாண்டு தழைத்தோங்கவும் அக்குடும்பத்தில் வாழையடி வாழையாக பல வள்ளல்கள் தோன்றவும் எல்லாம் வல்ல இறைவன் கருணை புரிந்தருள்வாராக!

சர். அண்ணாமலை வாழ்க! அவரது தருமம் சிறக்க!!

அரிவாட்டாய நாயனார் சரிதை

வண்ணை நகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள்
எழுதியது.

கலிவெண்பா.

சங்குபிர்த்த வெண்டாளங் கண்டு தனிக்குமுதம்
பொங்குமதி கீழ்பாற் பொலிந்ததென—அங்கவருஞ்
அங்கழனி சூழுங் கனமங் கலமதனில்
மங்கலிலா இல்வாழ்க் கையிற்வதிந்து — துங்கமிகு
மிக்க திருவனைத்தும் பெற்றவே ளாண்டலைவர்
தக்கபுகழ்த் தாயனா ரென்றழைக்கும்—பொக்கமிலா
நாமத்தார் மாலறியா நம்பனிணை யடியை
நேமமுடன் போற்று நியதியுளார்—மாமத்தஞ்
சூடும் பரமனுக்குத் துய்யசெந்நெ லாரமுதாங்
தேடுசிறு மாவடுசெங் கீரையுடன்—பீடுபெற
இன்னமுதுசெய்வித் திடுவாரிந் நன்னிலையிற்
பின்னமின்றி யெஞ்ஞான்றும் பேணிவந்தார்—பொன்மிகுந்த
நாளிலன்றி நீங்காத நல்குரவு வந்திடினும்
மீளியிவரீயாது விட்டுவிடார்—தோளியலால்
ஆற்றுவாரென்பதனை அம்புவிக்குக் காட்டவவர்
போற்று திருவனைத்தும் பொன்றிடவே—கூற்றுதைத்த
நித்த ரியற்றதனு நெஞ்சங் கவன்றிலராய்ப்
பத்தர் முன்போற் றொண்டனைத்தும் பண்ணிவந்தார்—மெத்துமிடி
கூடியதாற் செய்களிற்போய்க் கூலிக்கு நெல்லறுத்து
நீடுசெந்நெல் கொண்டு நிமலருக்கு—வீடலின்றித்
தூயவமு தாக்கித் துதித்திருந்தார் பண்ணையெலா
மேயசெந்நெ லாக விளைந்திடவே—நேயமிகுந்
தேழையான் செய்தவத்தாலீது செந்நெ லானதென
கோழையின்றிக் கூலிகொண்ட நெல்லனைத்து—மாழையொண்கண்
அம்பிகையாள் பாகற் கமுது செய்வித் தாரதனால்
நம்புமுணா வின்றி நலிவதனை—உம்பர் தொழுந்
தேவியார் கண்டு திகழ்மனையின் கொல்லைதனின்
மேவு மடகுகொய்து வேகவைத்துத்—தாவுமன்பால்
ஊட்டநுகர்ந்து உறுசிவதொண் டாற்றிடுநாள்

வீட்டின் மருங்கில் விளையாடகி—னீட்டமுற்று
மானவடமீ னனையார் மகிழ்ந்துககம்
வேளைதொறும் வார்க்க விரும்பியுண்டு—நீளரவஞ்
சூடு மிறைவரது தொண்டியற்று போர்திவசம்
வாடலிலாக் கீரையுடன் மாவடுவுந்—தேடரிய
செந்நெ லரிசியா யாவையுஞ்சேர்த் தோர்கூடை
தன்னிலிட்டுச் சென்னிதனிற் சுமந்து—பன்னியரும்
தக்கவா னைந்நினையுந் தாங்கிவரத் தாயனார்
மிக்க பதந்தளர்ந்து மெல்லிநல்லாள்—புக்கணைத்தும்
வீழத்தான் கொண்டுவந்த யாவும் நில்வெடிப்பிற்
பாழாகச்சிந்தியதைப் பார்த்தடியார்—ஏழையங்கு
போவதினி யென்னையென்று போதமுறை நாதருக்கு
மேவியமுதூட்ட விதியில்லாப்—பாவியேன்
வேட்டவுலகி லிருத்தல் விழலென்றரிவாள்
பூட்டி யரிந்தார் பொருக்கெனவே—ஊட்டிதனை
அற்றைப் பொழுதிற் கழுத்தரியு மாயுதத்தைப்
பற்றுகர மாற்றப் பறையுடனே—சிற்சபையில்
ஆடுவார் கையும் விடேலென் றறைமொழியும்
ஈடில் கமர்நின் றெழுந்தனவே —தோடுடையார்
அத்த மரிவாள் பிடித்த வற்கரத்தை
மெத்துபரி வோடுபற்ற வெவ்வூறு—அத்தருணம்
நீங்க மகிழ்வெய்தி நிமலன் றிருப்பதத்தை
ஓங்குபரி வால்வணங்கி யுச்சிமிசை—தாங்கிகர
முள்ளவராய் நின்று உலப்பிறுதி செய்நிடலும்
வெள்ளேற்றிற் றோன்றி விருப்பமுடன்—கள்ளமிலாச்
சிந்தையாய் நீபுரிந்த தொண்டுநன்று சேயிழையோ
டெந்தனுல கெய்தி யிருவீரு—மந்தமிலா
இன்ப நுகர்வீ ரெனப்புகன்று ஏறுகைத்துத்
தன்கயிலை போந்தார் தனி முதல்வர்—பின்பவர்கள்
தொண்டருமில் லாளுஞ் சுரர்வணங்கச் சோகமிலா
வண்சிவலோ கத்தடைந்து வாழ்ந்திருந்தார்—பண்பயிலு
மன்பரரி வாளாற் களமரிந்த தன்மையினற்
பின்னரிவாட் டாயரெனப் பேர்பெற்றார்—அன்னவரின்
பாதாம் புயத்தைப் பணிந்தெமைப்பந்தித்தமல
வேதனையை நீக்கிடுவோமே ”

திருச்சிற்றம்பலம்.

லேயோனிதன்

ஸ்ரீமான். K. சங்கர நாராயணன் எழுதியது.

சுதந்தரமாக வாழும் குடியரசுகள் நிறைந்து பெருமை பெற்றிருக்கும் ஐரோப்பா கண்டத்தில் கிரீஸ் என்னும் ஒரு தேச மிருக்கின்றது. அது சீரும் செழிப்பும் பொலிந்து கிடக்கும் நாடு! பிரகிருதியின் அழகு திகழ்ந்து விளங்கும் நாடு! அந் நாட்டின் வளப்பமும் செல்வமும் சொல்வதற் கரியதா யிருந்தமையால் அன்னியர் எக்காலத்திலும் அதைத் தாக்கிக் கொண்டே வந்தனர். அவர்களில் பாரசீக மன்னனாகிய செர்ஸஸ் என்பவன் ஒருவன்.

செர்ஸ்ஸ் படையெடுத்த காலத்தில் கிரீஸ் அநேக பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு பகுதியும் தனித்தனி சிற்றரசனால் ஆளப்பட்டு வந்தது. அத்தகைய பகுதிகளில் ஸ்பார்த்தா (Sparta) என்பது ஒன்று. இம்மாகாணத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு ஸ்பார்த்தர்கள் என்று பெயர். தேசாபிமானத்திலும், ஆண்மையிலும் இவர்களை மிஞ்சுபவர் இவ்வுலகத்திலேயே கிடையாது. அவர்களுக்குள் ஒரு விசேஷ வழக்கமிருந்து வந்தது. அதாவது பிறந்த குழந்தையை மலை யுச்சியிற் கொண்டு விட்டு விடுவார்கள். குளிரோ தாங்கமுடியாததாயிருக்கும். அக்குளிருக்கிரையாகாமல், அக்குழந்தை இருக்குமானால் மூன்றாம் நாள் அதை நகரத்துக்குக் கொண்டு வந்து "இப்பாலனே நம் வம்சத்திற் பிறந்தவன்" என்று மகிழ்ந்து போற்றி வளர்ப்பார்கள். இக்காரணத்தினாலேயே இவர்கள் மிகவும் பலசாலிகளா யிருந்தனர். மேலும் இவர்கள் மிகவும் சாமானிய பிரகிருதி வாழ்க்கையையே நடத்தி வந்தார்கள்.

ஆடம்பரம், வீண் டம்பங்களற்ற எளிய வாழ்க்கை நடத்திய அவர்கள் சுதந்தரத்தையே உயிரினு மரியதாக மதித்தனர். மேலும் அந்நாட்டு வாலிபர், அநேக நாட்களுக்குப் பசியைத் தாங்கியும், பெரும் பாலும் இயற்கை உணவை உண்டும், பனி, மழை, வெயில் முதலியவைகளை லக்ஷியம் செய்யாமலும், இயற்கை

வாழ்வை நடத்தி வந்ததினால் அவர்கள் சுதந்தரப் போரை நடத்தும் ஆற்றல் வாய்ந்தவரா யிருந்தனர். ஆடம்பரத்தை விடுதலே சுதந்தரத்தைக் காக்கும் சிறந்த வழி!

சிறந்த ஸ்பார்த்த ஜாதியை அக்காலத்தில் ஆண்டு வந்த மன்னன் பெயர் லேயோனிதன். அளவிடற்கரிய அழகான திடகாத்திரமுடையவன். நாட்டை செவ்வனே செங்கோல் ஓச்சிவந்தான். இம்மன்னன் காலத்திற்றான் சேர்சஸ் கிரீசின்மேற் படையெடுத்து வந்தான். சேர்ஸஸ் படையெடுத்து வருவதைக் கேள்விப்பட்டதும் யுத்தவீரர்கள் எல்லாம் ஆயுத மேந்தி, கவசம் தரித்து யுத்தத்திற்குப் புறப்பட்டனர். மூவாயிரம் யுத்த வீரர்களுக்குத் தலைமையாய் லேயோனிதன் கிரீஸினின்றும் புறப்பட்டான்.

எதிர் கக்ஷியிலோ லக்ஷக்கணக்கான வீரர்களிருந்தனர். இவ்வுலகத்தையும் ஜெயிக்கும் ஆற்றல் அவர்களுக்குண்டு. இவ்வளவு பெரிய படையை யெதிர்க்க ஸ்பார்த்தர்களுக்கு எங்ஙனம் முடியும்! இருந்தாலும் தேசத்திற்காக யுத்தம் செய்தே தீர வேண்டு மென்ற மேன்மையான எண்ணத்துடன் லேயோனிதன் கூட்டம் சென்றது.

பாரசிக சைனியம் கிரீஸுக்குள் போவதற்கு, வழி மத்தியிலிருந்த மலைத்தொடரைக் கடக்க வேண்டியிருந்தது. இம்மலைத்தொடர்களே கிரீஸின் எல்லைகள். கிரேக்கவீரர் இத்தொடர்களைத் தாண்டிக் கொண்டு தம்மை நோக்கிவரும் சைனியத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். கடல்போல கோஷித்தன எதிரிகளினொலிகள்! நெருக்கமாயும் பிளக்க முடியாத படியும் எதிரிகளின் சைனியம் அணிவகுக்கப்பட்டிருந்தது. முன்னணியைப் பிளந்து சென்று யுத்தம் செய்வது கஷ்டமென லேயோனிதன் உணர்ந்தான். அதனால் பின்னுற் சென்று தாக்கக்கருதி தன் மூவாயிர மனிதரையும் வந்த வழியே திருப்பி கிரீஸின் எல்லையாகிய மலையை நோக்கிச் செலுத்தினான்.

அம்மலையில் ஒரே ஒரு கணவாய்தானுண்டு. இவ்வழியாகத்தான் மலையைக் கடந்து செல்லவேண்டும். மலைமேல் ஏறிவருவதோ கனவிலும் நினைக்கமுடியாத காரியம். அக்கணவாயின் பெயர் தர்மாபுலே.(Thermopylae) லேயோனிதன் கணவாயைக் கடந்து அருகாமையில் தனது சைனியத்தை நிறுத்திக் கொண்

டான். எவ்வளவு பெரியதா யிருக்கும் சைனியமும் கொஞ்சம் கொஞ்சமாய்த்தான் அக்கணவாயின் வழியாய் வரமுடியும். அப்பொழுது கிரேக்கரை எளிதாய்த் தடுக்கக் கூடுமென்று நினைத்தான் லேயோனிதன். ஆகவே அக்கணவாயையே தன் யுத்த களமாக அமைத்துக் கொண்டான்.

வந்து விட்டது! எதிரியின் பெரிய சைனியம்! அச்சமயத்தில் லேயோனிதன், சற்று பயமடைந்த தன் ஜனங்களை நோக்கி, "நண்பர்களே! சகோதரர்களே! எதிரியின் சைனியமோ ஆற்று வெள்ளம் போல் வந்து கொண்டிருக்கின்றது. நம்முடைய எண்ணிக்கையோ மிகவும் சொற்பம். ஆதலால் நமக்கு மாணமேற்படுவது திண்ணம். ஆனால் எதற்காக நாம் யுத்தம் செய்கிறோம்? தாய் நாட்டின் சுதந்தரத்தைக் காப்பாற்ற! புகழத்தக்க அம்மேன்மையான காரியத்தில் உயிரை விடத் துணியாத, சோதரர்கள் வெளியே சென்றுவிடலாம். என் மனதை யொத்த மனிதருடன் நான் இக்கணவாயைக் காக்கப் போகிறேன்" என்று கூறவும், இரண்டாயிரத்து எழுநூறு பேர் படையை விட்டுச் சென்றனர். மனந்தளராத எஞ்சியிருந்த முன்னூறு சிப்பாய்களுடன் லேயோனிதன் கணவாய்க் கருகாமையில் மறைந்து நின்றான். சேர்ஸஸும் தனது சைனியத்தோடு கணவாய்க்கு வெளிப்புறம தங்கி யிருந்தான்.

தெமராத்தன் என்னும் ஸ்பார்த்த அடிமையை பாரசீகர்கள் அனுப்பி, எதிரிகள் கணவாயில் எவ்வாறிருக்கின்றன ரென்று அறிந்து வரச் செய்தார்கள். அவன் கணவாயை அடைந்து, குதிரைமீதினின்றுமிழிந்து, எதிரிகளைத் தேடிப் பார்த்தான். அச்சமயம் லேயோனிதன் மனிதர்கள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டுத் தலை கோதிக் கொண்டிருந்தார்கள். இவ்விஷயத்தை அவன் சேர்ஸஸினிடம் தெரிவித்தான். அதைக் கேட்டு பாரசீக மன்னன் சிரித்து, "சமீபத்தில் நடக்கப்போகும் கொடிய யுத்தத்தைக் கவனியாமலா தலை கோதிக் கொண்டிருக்கின்றனர்!" என்றான்.

மறுநாட் காலையில் யுத்தம் ஆரம்பமாகும். ஆகவே தைரியத்திற் சிறந்த லேயோனிதன் தன் ஆட்களை நோக்கி, "சகோதர வீரர்களே! நாம் இன்று கடைசி வேளையாகச் சாப்பிடுவோம்" என்று சொல்லவும் அவனது ஆட்கள் சாப்பாட்டைச் சீக்கிரமாகவே

முடித்து, ஆயுதத்தைக் கையிலெடுத்து பொழுது விடியும் தருணத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தனர். பொழுதும் விடிந்தது. யுத்தமும் ஆரம்பித்தது. செர்ஸ்ஸ் தன்னுடைய போர் வீரர்களை கணவாய்க் கருகாமையில் கொண்டு வந்து விட்டான். பற்பல ஆயுதங்களைத் தாங்கி இருதிறத்தாரும் சமர் புரியத் தொடங்கினர். சேர்ஸஸ் சைனியத்தினின்றும் எத்தனை பெயர் கணவாயின் வழியாய் உட்செல்ல முடியுமோ அத்தனை பெயரும் அக்கணவாயினின்றும் எதிர் நோக்கி வந்தனர்.

லேயோனிதனின் போர்த்திறம் மெச்சத்தகுந்தது. வில்லாற் சிலரை அடித்து வீழ்த்தினான். ஆனால் அவனது ஆட்களில் அநேகர் கொல்லப்பட்டனர். ஆகவே இறந்தவர்களின் தேகமானது கணவாயில் கொஞ்ச இடத்தை அடைத்துக் கொண்டது. இரண்டாவது தடவையாக கிரேக்கர்களை பாரசீகர்கள் எதிர்த்தார்கள். அவர்களையும் லேயோனிதன் தோற்கடித்தான். அவன் உடம்பில் காயங்கள் பட்டன. இருந்தாலும் மனந்தளராமல் தன் சைனியங்களை உற்சாகப் படுத்திக்கொண்டே கடுமையாய் சமர் புரிந்தான். பாரசீகர்கள் பிணக்குவியலின் மேல் ஏறியதுதான் தாமதம், கிரேக்கர்கள் அவர்களை வீழ்த்திவிடுவார்கள். இறந்த பிணக்குவியலே லேயோனிதனுக்கு அதிக உதவியாக இருந்தது. இருந்தாலும் எதிரி சைனியத்திலுள்ள குதிரைப்படை வீரர்கள் பிணக்குவியலுக்குமேலுள்ள குதிரைகளின மேலிருக்கின்ற காரணத்தினால் அவர்கள் கிரேக்க சைனியத்தை நோக்கி குறிவைத்து அம்பு எய்வதற்கேற்ற வசதி யேற்பட்டது. கோடிய செய்கை! அவ்வம்புகளில் ஒன்று சுதந்தரவீரன் கண்களிலொன்றை பிளந்து கொண்டு சென்றது. எனினும் பின்னடையாமல் லேயோனிதன் பின்னும் யுத்தம் செய்துகொண்டே யிருந்தான். எந்த வீரத்தோடும் உற்சாகத்தோடும் பாஜிப்பிரபு மஹாராஷ்டிரத்தின் சுதந்தரத்தை காப்பாற்ற ராயக்காடு கணவாயில் யுத்தம் செய்தாரோ, எந்த வீரத்தோடும் உத்சாகத்தோடும் ஹொராஸியன் தீபர்நதியின் பாலத்தில் நின்று தார்க்குவின் அரசனை ரோமாபுரியின் சுதந்தரத்திற்காக எதிர்த்தானோ அதே உத்சாகத்தோடும் வீரத்தோடும் லேயோனிதன் யுத்தம் செய்தான். என்றாலும் அநேக கிரேக்க வீரர் மாண்டனர். கேவலம் ராஜ்யத்தை மாத்திரம் ஜயிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் சண்டை செய்யும் வீரர்களை விட, தன்னாட்டின் சுதந்தரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று யுத்தஞ் செய்பவர்களின் ஆற்றல் அதிகமாதலால், லேயோனிதன் மிகுந்த

தீவிரமாகச் சண்டை செய்தான். மலைக்குவியலின் உயரம் அதிகமாயிற்று. பாரசீகர் அநேகர் லேயோனிதனால் மாண்டனர். ஆஹா! கொடுமை! கிரேக்கரில் முப்பது பெயர்களே மீதி. இருந்தாலும் யானிதனின் தேசவிடுதலைத் தாகம் தணிந்த பாடில்லை. அம் பெயரையும் உற்சாகப் படுத்திக்கொண்டே வீரா வேசத் மர் புரிந்தான்.

இதற்குள் கிரீஸின் விரோதிகளாகிய வேறு ஜனங்கள் சேர் மன்னனுக்கு மலையைக் கடந்து வரும்படியான ரகசிய வழியொன்றைக் காண்பித்து அதன் வழியாக சத்துருக்களை உள்ளே வரச் செய்தனர். ஆகவே பாரசீகர்கள் மலையைக்கடந்து உள்ளே வந்து லேயோனிதனைப்பின்னிருந்தும் தாக்க ஆரம்பித்தனர். முன்னும்விரோதி! பின்னும் விரோதி! இதுவன்றோ கொடிய சண்டை! இதற்கு சமமாய் உலகத்தில் நடந்த சண்டைகளொன்றையும் ஒப்பிடமுடியாது! என்றாலும் லேயோனிதன் ஒருஸ்பார்த்தனல்லவா! அவன் இரத்தக்குழாயில் ஓடுகின்ற இரத்தம் ஸ்பார்த்த ரத்தமல்லவா ? எதற்கும் சலியாமல் எதிரிகளை வெட்டிக்கொண்டேயிருந்தான். அவனது மனிதர்களும் அவனையே பின்பற்றினர். அந்தோ எவ்வளவுநேரம் இவ்வாறு சமர்புரியஇயலும்! கடலலைபோல்வரும் பெருஞ் சேனையுடன், சுதந்தரத்திற்காகப் போராடும் இச்சிறுகூட்டத்தரால் என்ன செய்யமுடியும் ? அவ்வீரர்களுடைய ஆத்மாஇப் பொய்புலகை விட்டு விண்ணுலகுக்கேகிற்று. எண்ணற்ற பெரும் படைமுன் எத்துணை வீர மிருந்தாலும் என்ன செய்யலாம் ? ஆனால் அது மேன்மையல்லவா ; தேசத் திருத்தொண்டுக்கு சமராடிய வீரரொருவராவது தோற்று உயிர் வாழவில்லை; படைக்கஞ்சி ஒருவரும் ஓடவில்லை. தன் வீட்டை விட்டுப் புறப்படும் பொழுது தன் மனைவியைத் தழுவி, அவள் துக்கக்கண்ணீரைத் தன் வீராவேசத்தால் சந்தோஷ சாகரமாகச் செய்து, யுத்த களத்தில் கணவன் இறந்து படுதலே அவளுடைய மேன்மையென்றும் மானத்தையும் புகழையுமே உயிரினுமரிதாக மதிக்க வேண்டுமென்றும் உபதேசஞ் செய்து, விடைபெற்றுக் கொண்டு தன் இளம் பாலர்களை மார்போடணைத்து முத்தமிட்டு, வழியெங்கும் புஷ்பங்களாலும் பாமாலைகளாலும் நகரமாந்தர் ஆசிகூற வழிநடந்து சென்ற கிரேக்க வீர சிங்கம்—லேயோனிதன்—பகைவனின் அம்பால் தேகம் பிளக்கப்பட்டு தன் தாய் நாட்டிலேயே மடிந்து கிடந்தான்.

சுதந்தர சிங்கத்தின் தைரியத்தை சேர்ஸஸ் கண்டான். ஆனந்தங் கொண்டான். அவன் அக்கணவாய்க்குள் வந்து லே

யோனிதன் முதலான கிரேக்க வீரர் முன்னூறு பேர்களின் பிரேதங்களை பெட்டிகளில் வைத்து தன் கையினாலேயே அடக்கம் செய்தான். இதுவன்றோ உத்தம விரோதியின் மனப் பான்மை! பிற்பாடு தெமராத்தனை யழைத்து, தற்சமயம் இவர்களைப் போல் கிரேக்கில் எத்தனை பெயரிருக்கின்றார்கள்" என்று கேட்க, எண்ணாயிரம் பேர்களிருக்கின்றார்கள் என்று தெமராத்த ளளித்தான். இதைக்கேட்டு மனந்தளர்ந்து இவ்வீரர்களைக் லும் எதிர்க்க நினைக்கக் கூடாது என்று தனது எஞ்சிய ருடன் செர்ஸஸ் பாரசீகம் போய்ச் சேர்ந்தான்.

லேயோனிதன் பெயரும் புகழும் இன்றும் சூரியனொளி போல் விளங்குவதற்குக் காரணம், தன் ஜன்ம பூமியாகிய கிரீஸ் நாட்டிற்கு உடல் பொருளாவி மூன்றையும் ஒருங்கே தத்தம் செய்தால் தான். அவனாத்மா வீர சொர்க்கத்தில் எக்காலத்தும் ஆட்சி செய்து கொண்டிருக்கும்!

பேசும் இயந்திரம்.

அமெரிக்காவில் ஆர். ஜெ. வென்ஸ்லி கண்டு பிடித்த இயந்திரம் இப்பால் நியூ யார்க்கில் டெலிபோனில் சங்கதியைக் கேட்கக்கூடிய பிடியை வளையத்திலிருந்து எடுத்து கிராமபோன் ரிகார்டு மூலம் ஒரு எண்ணைக் கூப்பிடுகின்றது. அவருடைய தலைமைக் காரியாலயத்திலோ ஒரு புது விதமான பேசும் இயந்திரமே கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த இயந்திரம் பணத்தை வாங்கிக் கொள்கிறது; சில்லறையைக் கொடுக்கின்றது; சாமான்களை ஒப்புவிக்கிறது; "உனக்கு வந்தனம்" என்று கூறுகிறது; மற்றும் பல சொற்களை உச்சரிக்கிறது. இவ்வியந்திரங்களை காரியாலயங்கள், ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டேஷன், முதலிய இடங்களில் தேசம் முழுதும் வைக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

காலஞ்சென்ற ஸ்ரீ. கோகலேயின் சகோதரர் குமாரி ஸ்ரீமதி சந்திராபாய் பாங்ஷேயை புனா கோர்ட்டுகளில் வக்கீல் தொழிலை நடத்த பம்பாய் ஹைகோர்ட்டார் அனுமதித்திருக்கிறார்கள். மகாராஷ்டிரத்தில் முதன்முதல் வக்கீல் தொழிலை நடத்த அனுமதி பெற்ற பெண்மணி இவரே யாகும்.

…தன் காரணம், அதற்கு ஜீவதாது …ள. அது ஒரு நிமிஷத்தில், சுமார் 72 தடவை …தாகத் தெரிகின்றது. ஒருநாளில் 1,03,680 தடவை துடிப்பதாக ஏற்படுகின்றது.

சென்ற மே மாதம் 14ந் தேதி நம் ராஜசக்ரவர்த்தி முன்னிலையில் திரண்ட சாஸ்திர விற்பன்னர்கள், "வில்லியம் ஹார்வே" என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட "ஹிருதய சக்தி," என்ற விஷயத்தைப் பற்றி சர்ச்சை செய்தனர். இவர், பூதக்கண்ணாடியின் திருஷ்டியினாலும், துல்ய ஆயுதப்பிரயோகத்தினாலும், ரத்தவோட்டத்தையும், ஹிருதய கோசத்தின் தத்துவத்தையும், ஊடுருவிப் பார்த்து, உலகினர்க்கு உபதேசித்த நிபுணராவர்.

ஹிருதயம் என்பது, ஒரு ஒழுங்கான ஒலியுடன், திறப்பதும் மூடுவதுமான, உட்குழைவுள்ள, சதையாலாய இயந்திரமாகும். நம் தேகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பிற்கும், இன்றியமையாத பிராணவாயுவை ரத்தவோட்டத்தினால் ஊட்டுமாறு, இது தன்னுள்ளடங்கிய இரத்தம் தேகமெங்கும் பரவும் வேகத்துடன் சுருங்குகின்றது என விளங்கும்.

ஹிருதயம், நின்று, நின்று துடிக்கிறதேயல்லாது, இடைவிடாமல் துடிப்பதில்லை. அதன் காரணம் ஒவ்வொரு துடிப்புக்கும் இடையே உண்டாகும் காலதாமதமேயாகும். எப்போது அது நிற்கிறது என்பதையும், அது துடிக்கிறது என்பதையும், சிந்தித்தும் பார்க்கில், பத்துத் தடவை துடித்தால், பதினான்கு தடவை நிற்கின்றது.

மானிட ஹிருதயம், மிருகங்கள், பட்சிகளுக்குள்ளன போலாய இரட்டை உறுப்பாகும். அதாவது, இரண்டு ஹிருதயங்கள், ஒன்றன் பக்கம் ஒன்றாய், ஒலிப்பது போலவே, துடியா நிற்கின்றன.

ஒவ்வொரு ஹிருதயத்திற்கும், இரண்டு அறைகள் உண்டு. அவ்வறைகளுக்கிடையில், அதிக நுட்பமானதும், சரியாய்ப்

வலது...
டிருக்கும், கெட...
வரும். நடது இடது பக்க...
லிருந்து வரும் சுத்தமான ரத்தத்...
செய்து கொண்டுவரும். ரத்தம், நுரையீரலின் ...
பக்கத்திலிருந்து இடது பக்கம் பாயும்.

ஹிருதயத்தினுல் விருத்தியடையும் சக்தி ஒருவராலும் ஊகிக்கத் தகாத அவ்வளவு அபரிமிதமாகும். சாதாரண அளவுள்ள ஒரு மனிதனின் ஹிருதயம், இரண்டு நாளில், ஆயிரம் மனிதர்களை ஒரு அடி மேல் கிளம்பச் செய்யும்படியான அல்லது ஒரு மனிதனை, ஆயிரம் அடி, மேல் கிளம்பச் செய்யும்படியான சக்தியை அடைவதாகப் பரிமாணப் படுத்தப் பட்டிருக்கின்றது.

மானிட ஹிருதயத்தின் துடிப்பு அதி துரிதமாயுமில்லை, அதி நிதானமாயுமில்லை. தவளைகளுக்கு, ஒரு நிமிஷத்தில், 36 தடவை துடிக்கின்றன—நாய்களுக்கோ, 100 தடவைகள் ஹிருதயத்துடிப்பு உண்டாகின்றன. உஷ்ண ரத்தத்தை உடைய மிருகங்களில் மிருகத்தின் பருமனுக்குத் தக்கபடி துடிப்பு மட்டுப்படுகின்றது. பிறந்த குழந்தையின் துடிப்பு மனிதனை விட இரண்டுமடங்கு அதிகமா யிருக்கிறது.

நவீன ஆராய்ச்சியில் ஆச்சர்யம் ஏற்படக்கூடிய விஷயம் என்னவெனில் ஹிருதயத் துடிப்பு உண்டாகும் ஒவ்வொரு சமயத்திலும், ஒரு மின்சார சக்தி ஏற்படுகினறது. இச்சக்தி, அதி நுட்பமேயானுலும், இது உண்டாவதில் யாதொரு சந்தேகமும் கிடையாது.

"ஹிருதயம் துடிப்பதேன்" என்பதை நாம் உண்மையில் உணர்ந்தோமில்லை. அவ்விதம்உணர்ந்திருப்பின் உயிர்நிலையையே கண்டவர்களாவோம். அதைக் கண்டுவிட்டாலோ, உயிரை, உடலிலிருந்து பிரியாமல் செய்தல் கூடும், அதாவது இறப்பதைத் தடுத்து விடலாம். எதனுல், துடிப்பு ஆரம்பமாகிறது என்பதும் ஆச்சரியமே. எதனுல் துடிப்பு முடிவடைகின்றது என்பதும் ஆச்சரியமே.

ஹிருதயத்தில். இரத்த வோட்டம் இருப்பதனுல், துடிப்பு உண்டாகிறது என்று எண்ணினுலோ, ரத்தம் உண்டாவதற்குமுன்

...ருப்பதனுல், துடிப்பு உண்டா
...லா, நரம்புகள் உண்டாவதற்கு முன்ன
... துடித்துக் கொண்டிருக்கிறது. நரம்புகள் நறுக்கப்
... ஹிருதயமும், கோஞ்சநேரம், துடித்து விட்டே, அடங்கு
கிறது.

உஷ்ண ரத்தத்தை உடைய மிருகத்தின் ஹிருதயம், சரீரத்தி லிருந்து துண்டிக்கப்பட்ட பிறகும், துடிப்பு அடங்க அதிக காலம் ஆகின்றது.

ஒரு கோழி முட்டையி லிருந்து அணுவுக்கும் சிறிய அளவுள்ள ஹிருதயத்தை பிரித்தெடுத்து, சூடான திரவத்தையுடைய ஒரு கண்ணுடிப் பாண்டத்தில் போட்டு வைத்தால், அதன் ஹிருதயத் துடிப்பை மாதக் கணக்காய் கண் கூடாகக் காணலாம். இது வளர்ச்சி யுறுவதையம் இரண்டு மூன்ருகப் பிரிவதையும் பார்க்கலாம்.

இவ்வாராய்ச்சியினுல் ஹிருதயத்தின் பல பாகங்களையும், அதன் தொழில்களையும், ஹிருதய சக்தியின் பலத்தையும், துடிப்பின் வரலாற்றையும் ஒருவாறு உணர்ந்தோம். ஆனுல், ஹிருதயத்தின் ஆதி அந்தத்தைக் கண்டு பிடிக்க முடிய வில்லை.

(தமிழ் நாடு)

பிரபுவின் உயிரைக் காத்த பெண்.

நியூயார்க்கிலுள்ள ஒரு ஆஸ்பத்திரியில் சிகிச்சை யடைந்து வந்த ஸ்ரீ. ஹொரேஸ்பூர் என்ற ஒரு பிரபு, திடீரென அந்த ஆஸ்பத்திரியின் 14-வது மாடியிலுள்ள ஜன்னல் வழியாக வெளியே குதிக்க யத்தனிக்கையில், அந்த ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு சிறு வயதுள்ள மருத்துவப் பெண், அவர் கீழே விழாதபடி பிடித்துக் கொண்டு உடனே உரக்க சப்தம் செய்ய, மெத்தைகள் போட்ட மோட்டார்களுடன் போலீசார் ஜன்னலண்டை வந்து சேர்ந்தனர். பின்பு மருத்துவப் பெண் மெதுவாக பிரபுவை மோட்டாரில் குதிக்கும்படி செய்து, அவருக்கு எவ்வித காயமு வேற்படாமல் காப்பாற்றினர்.

ஸ்ரீமான். வீராசாமி,

முதன் முறையாக மலாய் சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட அங்கத்தினர்.

வண்டிக்கார கந்தன் வாழ்க்கை

மோகனூர். கி. வா. ஜெகந்நாதன் எழுதியது.

1. கட்டை வண்டியிற் காலை நீட்டியு
றங்கு கின்றனன் கந்தனே
நிட்டை யுற்றவர் அத்தனை சுகம்
நேர்ந்து பெறுவ்தும் ஐயமே
சட்டை இல்லையோர் குட்டை இல்லை
மேற் சாயத் துணியும் பல் பொத்தலாம்
நட்ட நடுவழிச் சாலை தன்னிலே
நகர்ந்து சென்றதவ் வண்டியார்.

2. மூட்டை ஏற்றிஅவ் வூரிற் சென்றவை
முற்றும் உரியவர் முன்றிலிற்
போட்டுக் கூலியும் பெற்றனன் இனிப்
போதும் ஆபது காளைகள்
தீட்டு தவிடுபுல் கொட்டை நின்றிடச்
செய்தனன் கட்டுச் சொற்றினைப்
பாட்டையில் ஒரு கேணி அருகினில்
பசியை யாற்றிடத் நின்றனன்.

3. வண்டி கட்டினன், வேகமாகவே
வந்த காளைகள் ஆதலால்
சுண்டி ஓடிடப் பயந்தனன் அவன்
சொந்த உயிர் அந்த காளைகள்
கொண்டு கயிற்றினை வண்டி யிற்கட்டிக்
குறட்டை விட்டனன் தூங்கினன்
சண்டி யல்லஅக் காளை மாடுகள்
சாது வாக நடந்தவே

4. சென்று சென்றப மூக்க மான
நிறத்தினு லவை சிறு நடை
ஒன்றி மெள்ள நடந்த உள்ளுறங்கும்
அவன் ஒன்றும் செய்கிலன்
கன்று வானிலை கனவுமில்லை நற்
காற்று வீசிட இன்பமாய்
நன்று தூங்கினன் வண்டியின் நடை
நல்ல ஊசலும் போலுமால்

7. வண்டி யின்அடி யில்விளக் கொன் று
மங்கி மங்கி எரிந்தது
ஒண்டி* யாய்வரும் பயமு மில்லை அ ;
வுறக்கமே பெருந் துறக்கமாய்
கொண்டி ருந்தஅக் கோதிலாதவன்
குறுகு மின்பமா ரறிகுவார் ?
மண்டு செல்வரும் இத்தனை சுகம்
வாய்ந்த நிலையினை அறிவரோ ?

6. கந்தன் வாழ்தரும் பங்க ளாளது
கண்ட னையொரு குடிசையே
சந்தை கட்டமங் கேயிருந்து பல்
லூர்களுக்கும் அச்சமயம் போல்
வந்த தானிய மூட்டைகள் பல பாரங்
கள் கட்டை வண்டியில்
சொந்த நாணயத் தோடு கொண்டுபோட்
டுற்ற கூலியிற் சுகிப்ப னால்

7. சோறு காய்ச்சவும் தண்ணீ ரூற்றவும்
சுகித்திருக்கவும் சொந்தத்தில்
கூறு மாமன்றன் மகளைக் கட்டினன்
குற்ற மில்லைபவள் அழகிலே
ஆறு மாதத்தில் ஒர்கு ழந்தையைப்
போழ் தவள்தன்க ரத்திலே
மாறி லாதகு டும்ப வாழ்க்கையில்
மற்றென் இன்பங்கள் வேண்டுமால்

8. பட்டும் இல்லைபல் பணியுமில்லையோர்
பாயும் நல்லதாய இல்லையே.
தொட்டுக் கட்டிய தலைவனும் அந்தத்
தலைவியும் மிகச் சுருக்கமாய்
இட்டமேவி அவ் வெளிய வாழ்க்கையில்
இன்ப மைந்தனர் முருகன்றன்
தட்டில் நன்னலப் புன்னகை அந்தக்
குடிசையில் மிகச் சார்ந்ததே.

*ஒண்டி—ஒன்றி என்பதன் மரூஉ. தனிமை என்ற பொருள் படும்.

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2	0	0
தென்னுபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2	8	0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ. 40	0	0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ. 50	0	0

சிறந்த வாசனை

ஊதுவத்திகள்!

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள்! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி சேர்	1-க்கு	6—0—0
அம்பர் வத்தி ,,	1-க்கு	5—0—0
கிலீட் வத்தி ,,	1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி ,,	1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS

30 வருடகாலமாய் உலக பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாச்சார்லு அவர்களின்

ஆரோக்கியத்தையும், தைரியத்தையும், உண்டாக்கும்.

ஜீவாமிருதம்

பலத்தையும் உற்சாஹத்தையும், விருத்தியாக்கும்.

ரத்தத்தை விருத்தியாக்கும், மேகவாதநோய்களை போக்கடிக்கும், எல்லாவித பலஹீனங்களையும் போக்கும்ரோகிகளுக்கு நல்
ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும், லது, மாரதிர்ச்சியை
லோஹங்களாலும் தயார் செய்யப்பட்டது. போக்கும், கற்பகாரகங்களை நீக்கும், குழந்தைகளுக்கும் கர்பவதிகளுக்கும் உத்தமம், முலைப் பாலை விருத்தியாக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது மூளைக்கு வலுவை யுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராணமித்திர மானது, பிராண சக்தியை ஜாஸ்தியாக்கும் க்ஷய ரோகிகளுக்கு மிக வும் நன்று, காஸரோகிகளுக்கு அமுர்தம் போன்றது, மாருக்கு அதிகபலத்தை கொடுக்கும், ஸ்வாசப்பைகளுக்கு அதிக பலமுண்டாக்கும், உப்பஸ ரோகிகளுக்கு ரெம்பவும் ஹிதம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 3—4—0.

உபயோகவிதி மருந்துடனனுப்பப்படும்.

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, **Post Box 287, Madras.**

மனோஹரி.

அழகியதோர் கதை. இதில் விக்கரமகேதுவின் தீச்செயலால் "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதையும், மனோஹரி என்னும் பெண் தன் தகப்பனூர் கிழட்டு அரசனுக்கு மணம் செய்துவிக்கப் போனூர் என்பதைக் கேள்விப்பட்டு தனது நந்தவனத்தின் பக்கம் வந்த குணசீலன் என்ற வேறொரு நாட்டு இளவரசனுடன் ஆண் வேடம் பூண்டு இரவு 12 மணிக்கு பின் பற்றிச் செல்வதும் நந்தவனத்தில் வைத்து காதலர்கள் இருவருக்கும் நடந்த சம்பாஷணைகளின் பேரில் இருவரும் காதலித்துக் கொண்டவைகளையும் படிக்கப்படிக்க மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும்.

விலை அணு 0—8—0.

மணிவடக்களவு

பட்டப்பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தினமாலையை திருடி மறைந்த ஒரு சுந்தரமாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஓர் அற்புதமான துப்பறியும் கதை.

விலை அணு 0—4—0.

மோட்டார் வண்டிகட்கு

யூனிவெர்ஸல் பாட்ரி



யூனிவெர்ஸல் பாட்ரி

பாட்ரி வேண்டும் போது அமெரிக்காவில் செய்யப்படும் பாட்ரிகளில் தலைமை ஸ்தானத்தை வகிக்கும் யூனிவேர்ஸல் பாட்ரி வாங்குங்கள். நாங்கள் உத்திரவாதம் எழுதித் தருகிறோம்.

இந்தியாவுக்கு சோல் ஏஜண்ட்கள் :—

ஸ்டாண்டர்ட் மோட்டர் எலெக்ட்ரிக் ஒர்க்ஸ்

மோட்டர் எலக்ட்ரிக் எஞ்சினீயர்கள், 33, மவுண்ட்ரோட், சென்னை.

குழந்தைகளை : :

: : நேசியுங்கள்!

அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில் சமையல் செய்யும்பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை

நெ.	1	செட்	1-க்கு	விலை	ரூ.	4—8—0
,,	2	,,	,,	,,	,,	3—8—0
,,	3	,,	,,	,,	,,	2—0—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, : : சென்னை.

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்குமேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்.

கையிலிருந்தாலும் அழகு !

பன்னிரு இதழ்களையும் ஒன்றாய்ச் சேர்த்து பைண்ட் செய்யப்பட்ட "லக்ஷ்மி" ஆண், பெண், சிறியோர், பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலையை அழகுப்படுத்துங்கள்.

1-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

3-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி, 99, :: :: சென்னை.

தென்னிந்தியாவில் நிகரற்ற,

ஆதிபரிமளச்சாலை.

(1800-ம்-௵ ஸ்தாபிக்கப்பட்டது)

இது இராஜக்கள், ஜமீன்தார்கள். கோடீஸ்வரர்கள் ஜனத்தலைவர்கள் டாக்டர்கள், வியாபாரிகள் முதலியோரால் ஆதரிக்கப்பட்டது.

K. தாவுத் ஸாஹிப்.

இவர், அனேக கண்காக்ஷிகளில் தங்கம், வெள்ளி மெடல்கள் பரிசளிப்பும் நற்சாக்ஷிப் பத்திரங்களும்; சென்னை எச். ஈ. தி. கவர்னரவர்களின் நன்கு மதிப்பும், அநேக கனவான்களின் நற்சாக்ஷி சோதனை பத்திரங்களும் பெற்று மான் மார்க்கு அடையாளமுடன் அடியிற்கண்டுள்ள சகல வாஸனை திரவியங்களால் நற்கியாதியும் பெற்றவர்.

வாஸனை சாமான்களின் விபரம்: உலகப்பிரசித்திபெற்ற,

ஆதி சந்தனாதித் தைலம்.

இது மூளைக்காதாரமானது. ஜெகத்தோர் மெச்சும்,

அரைக்கீரைவிதைத் தைலம்.

இது பித்தோஷ்ண நிவாரணி.

இவையன்றி, மேலானவாசனை யுள்ளவைகளாவன:—ஜவ்வாது, புனுகு; அறகஜா, அம்பர், பலவித வில்லை தினுசுகள், தூரதேச அத்தர் வகைகள், ஸ்தூரி, அம்பர், ஜவ்வாது பன்னீர், புனுகு அகர் முதலிய பத்தி தினுசுகள், மேல்நாடுகளின் ஸெண்ட் தினுசுகள், கூந்தல் வளர் தைலங்கள், பன்னீர் வகைகளும், சந்தன வில்லை, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை. அற்புத பற்பொடி, சந்தனப் பவுடர், கேஸரி பவுடர், தஸாங்கம், விலைக்கேற்ற கலப்பு சந்தனம், குல்கந்து பருவு நிவாரணி, வாசனைப் பாக்கு. சுண்ணாம்பு, கொப்பரைச் சீவல், ஸ்நானப் பவுடர், தங்கம் வெள்ளி ரேக்கமைந்த ஏலங் கிராம்பு வகையரா, சுருள் நைஸ் கொட்டைப் பாக்கு சீவல், மதுரைப்பிள்ளை ஊறுகாய் முதலியவைகள் மான் மார்க்கு அடையாளமுடன் எங்களிடம் கிடைக்கும்.

விபரமான காட்லாக் தேவையானால் கிடைக்கும், பல இடங்களில் தகுந்த ஏஜண்டுகள் தேவை. ஒருமுறை வாங்கி பரீக்ஷித்துப் பாருங்கள்,

K. தாவுத் ஸாஹிப் அண்டு ஸன்ஸ்

தந்தி விலாசம்:—"ஸெண்ட்மால்."

ஆதிபரிமளச் சாலை, 311, பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.

—

அநேக
மேடல்கள்
நற்சாட்சி
பத்திரங் ள்
பெற்றது.

—

ஷண்முகம்

பட்டணம்பொடி

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக் கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினதோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம். இன்புறும் காரம், பவுன் நிறம் மனோரம்மியம் இவ்வாறும் ஒருங்கே அமையப் பெற்றதினால் ஷண்முகம் என பெயர் பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அகல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்!

பலம்.		விலை.			தபால்சிலவு.			பாக்கிங்.			மொத்தம்.		
8	ரூ.	1	0	0	0	5	0	0	1	0	1	6	0
20	,,	1	12	0	0	8	0	0	2	0	2	6	0

டாக்டர். ஆர். கே. பரிமள மூக்குத்தூள். இதனால் ஜலதோஷம் ஒற்றைத் தலைவலி, மண்டைகுததல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத் தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.

1-புட்டி 1-க்கு அணா 4. டசன் புட்டிகள் ரூ. 2-4-0.
ஒரு சேர் டின் ரூ. 1-8-0.

இதர சாமான்கள் வேண்டுமானால் எங்களுக்கு விலை விபரம் எழுதவும்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பனி, (லிமிடெட்)
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்

ஸ்ரீமுனியோஸா

சில்க் அங்கவஸ்திரம்.

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாதம். வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0.

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 50,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99, சென்னை

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம், ரூ. 80—100—விலையுள்ள புடவைகளிலிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு × $2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12.

K. S. Muthiah &Co.,

Post Box 99, MADRAS.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்னை
21038

கராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா; விளிம்புக் கரைக்கு ஜரிகையினுல் "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தொடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முக தலைக்கு 4" ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரை யுள்ள புடவைகளை விரும்பும் ஸ்திரீகளுக்கு இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும் சந்தோஷத்தையும் கொடுக்கு மென்பதில் சந்தேகமில்லை!

No. 1.	16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	38—0...0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	44—0—0
No. 2.	16 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	30—0—0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	36—0—0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலையு முள்ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு, மிருதுவாகவும் பளபளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் திராக்ஷைக் கொடி (Lacha) முதலியவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	52—0—0
18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	60—0—0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT,

Post Box 99, **MADRAS.**

Show room: 287, Esplanade. ***Phone: No. 2693.***

முத்தையாஸ் - -

- நியூமாடல் புடவை

ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள்

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது 1½ இஞ்சி ஜரிகை வேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும் பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைப்புளூ முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பளபளப்பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக் கூடியதாயு மிருக்கும்.

16 மு x 44'' புடவை 1-க்கு ரூ. 45 முதல் 80 வரை.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, - - - MADRAS.

Show room : 287, Esplanade. *Phone : No. 2693.*

Printed at Muthiah Press, Madras and Published by K. S. Sundarar.

டிசம்பர் 31ல் முதல்
சித்ரா - கிரௌன்
சயானி
மற்ற நகரங்களிலும்
சிவாஜி கணேசன்
அளிக்கும்
பிரபுராம் பிக்சர்ஸ்
விடிவெள்ளி
ஒளிப்பதிவு: வின்செண்ட் கலை: கங்கா
சங்கீதம்: A.M.ராஜா எடிட்டிங்: N.M.சங்கர்
பாடல்கள்: கண்ணதாசன்-மருதகாசி
ஸ்டில்ஸ்: அருணசலம்
ஸ்டுடியோ: விஜயா வாஹினி
கதை, வசனம், டைரக்ஷன்: ஸ்ரீதர்
MOHAN ARTS

V5 · No·11, June · 1928 ·

15·11

3L
0211,N23L4
M28 · 5 · 11.
210380.